Appropriate Technology Services

# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது


மலர்: 12 இதழ் 11—12 நவெம்பர், 1960 விலை: சதம் 15

19 DEC 1960
CEYLON



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப் படம்



ஆனையிறவுக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் உள்ள பரந்தன் எனும் ஊரில் முன்னுள் அரசாங்கம் ஒரு இரசாயனத் தொழிற்சாலையை நிறுவியது. இங்கு உற்பத்திசெய்தற்கு எதிர்பார்க்கப்பட்ட சில பொருட்களின் விஷயத்தில் வெற்றிகாணப்படவில்லை யெனினும் தொழிற்சாலை தொடர்ந்து இயங்கிவருகிறது. கோஸ்ரிக் சோடா, குளோரின் எனும் இரண்டு பொருட்கள் இப்போது தயாரிக்கப்படுகின்றன. சவர்க்கார உற்பத்தியிலீடுபட்டுள்ள கம்பெனிகள் இங்கு உற்பத்தி செய்யப்படும் சோடாவை அதிகமாக வாங்குகின்றன. இத்தொழிற்சாலையின் நிர்வாகம் தற்போது டாக்டர் சண்முகம் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டுத் தாபனமாக மாற்றப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து சில பொறியியலாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளதுடன் இத்தொழிற்சாலையை இலாபமளிக்கும் ஒன்றாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பெரிய கட்டடங்களையும், உத்தியோகத்தர் இல்லங்களையும் கொண்டு மிகப்பெரிய நிலப்பரப்பில் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. கௌரவ கைத்தொழில் அமைச்சர் திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா அவர்கள் அண்மையில் இத்தொழிற்சாலைக்கு விஜயஞ்செய்தார்.

எமது கமராவில் பதிந்த இத் தொழிற்சாலைக் கட்டடத்தின் ஒரு பகுதியை இவ்விதழின் அட்டைப் படமாகப் பிரசுரித்துள்ளோம்.

## பிழை திருத்தம்

இப்பத்திரிகையின் மலர் 12 ன் 5 ம் இதழ் ஏப்ரல்—மே எனும் இருமாதங்களுக்கும் பொதுவாகப் பிரசுரிக்கப்பட்டபோது இதழ் 5—6 என்று குறிப்பிடத் தவறிவிட்டோம். ஜூன் மாத இதழை 6 வது எனக் கொண்டு இந்த இதழை 12 ம் மலரின் 12 ம் இதழாகக் கணித்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். 13 ம் மலரின் 1 வது இதழ் அடுத்த மாதம் (டிசம்பரில்) ஆரம்பமாகிறது.


## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மூன்று மந்திரிகளின் வட இலங்கை விஜயம் .. .. | 3 |
| 2. | பழைய மாணவர் சங்க விருந்தில் மூன்று மந்திரிகள் .. .. | 23 |
| 3. | மகாமகோபாத்தியாய கணேசையர் .. .. .. | 25 |
| 4. | இருளில் ஒளி .. .. .. .. | 27 |
| 5. | தமிழ் முனிவர் கணேசையர் .. .. .. | 30 |


J. N. R 13138—5,608 (11/60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services 183
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 183




மூன்று மந்திரிகளும் பலாலி விமான நிலயத்தில் வந்திறங்கியபோது எடுக்கப்பட்ட படம். யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. அல்பிரட் துரையப்பா, உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. சிவசிதம்பரம், யாழ்ப்பாண மாவட்ட அதிபர் திரு. ஸ்ரீகாந்தா ஆதியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# மூன்று மந்திரிகளின் வட இலங்கை விஜயம்

(அலுவலக நிருபர் திரு. அ. தெய்வேந்திரன் அவர்கள்)

அன்று ஒக்ரோபர் மாதம் 20 ந் திகதி வியாழக் கிழமை. தமிழரின் குதூகல நாளான தீபாவளித் தினத்துக்கு அடுத்த நாள். விதம் விதமான புதுப் புது ஆடைகளை அணிந்த ஆடவரும், பெண்டிரும், இளைஞர்களும், மேல்நாட்டுப் பாணியில் உடைதரித்த அரசாங்க உத்தியோகத்தர்களும், பொலிசாரும் காங்கேசந்துறைக்கு அண்மையிலுள்ள பலாலி விமான நிலய முன்றலிலும், உப்பரிகையிலும் காலை 7 மணி தொடக்கம் சாரிசாரியாக வந்து குழுமிநின்றனர். விமானந் தங்கும் ஸ்தானத்துக்கு எதிரே பல பிரமுகர்கள் ஆசனத்தில் வந்திருந்தார்கள். யாழ்ப்பாண மாவட்ட அதிபர் திரு. ஸ்ரீகாந்தா, நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா, யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஏ. ரி. துரையப்பா, உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம், சீமேந்துத் தொழிற்சாலை ஜெனரல் மனேஜர் டாக்டர் ஜீ. பொன்னம்பெருமா, வடமாகாணக் காரியாதிகாரிகள் முதலிய பல பிரமுகர்கள் அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டார்கள். விமான நிலையம் தமிழ்நாட்டுக்கும், கலாசாரத்துக்கும் உரிய விதத்தில் பலவித மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நான்கு நாதஸ்வரக் கோஷ்டிகள் இன்னிசை அளித்த வண்ணமிருந்தன. முன்வாசல் மத்தியிலே குத்துவிளக்கு ஏற்றப்பட்டிருந்தது. பத்திரிகைப் பிரதிநிதிகளும், படப்பிடிப்பாளர்களும் ஆங்காங்கே ஆயத்தமாக நின்றுகொண்டிருந்தார்கள். இந்த ஏற்பாடுகள் யாவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் மூன்று மந்திரிகளான **திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா, திரு. பி. பி. ஜி. கலுகல்ல** என்போரின் வட இலங்கை விஜயத்துக்காகச் செய்யப்பட்டவையாகும்.

**விமான நிலையக் கட்டடத்துள் பிரவேசித்த பொழுது பல பிரமுகர்கள் மந்திரிகளுக்கு மாலையிட்டு நல்வரவு கூறி அன்பாக வரவேற்றனர். காரியாதிகாரி திரு. ஸ்ரீநிவாசன் அவர்கள் மந்திரிகள் கோஷ்டியைச் சேர்ந்த ஒரு பிரமுகரை வரவேற்பதைப் படத்தில் காண்க.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரிகள் வந்த விமானம் சரியாக காலை 8.40 மணிக்கு பலாலி விமான நிலையத்தை அடைந்தது. நாதஸ்வர, பேரிகைகள் பலத்து ஒலிக்க மக்கள் கை தட்டி ஆர்ப்பரிக்க, வெடிகள் முழங்க மூன்று மந்திரிகளும் புன்னகை தவழ்ந்த முகத்தினராய் விமானப் படிகளில் இறங்கி வந்தார்கள். மேலே குறிப்பிட்ட யாழ்ப்பாணமாவட்ட அரசாங்க உத்தியோகத்தர்களும், இரு பாராளுமன்றப் பிரதிநிதிகளும், இன்னும் பல பிரமுகர்களும் மந்திரிகளை கை இலாகுகொடுத்து வரவேற்று மலர்மாலை அணிந்தனர். ஒரு சில விநாடிகளுள் மந்திரிகளின் முகங்களையே பார்க்க முடியாத அளவுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. திருமதி டயஸ் பண்டாரநாயக்காவுக்கு மலர்ச் செண்டு வழங்கப்பட்டது. பன்னீர் தெளித்துச் சந்தனப் பொட்டிடப்பட்ட மந்திரிகள் பல பெரியார்களுக்கு அறிமுகஞ் செய்துவைக்கப்பட்டனர். விமான நிலையக் கட்டடத்திலிருந்து நிலபாவாடை மீது நடாத்திச் செல்லப்பட்ட மந்திரிகள், வாசல் முன்றலில் வெகு அழகாகச் சோடிக்கப்பட்ட இரட்டைக் குதிரை வண்டியொன்றில் ஏற்றிச் செல்லப்பட்டனர். யாழ்ப்பாணப் பிரதிநிதியும், உடுப்பிட்டிப் பிரதிநிதியும் அவ்வண்டியில் மந்திரிகளுடன் அமர்ந்திருந்தார்கள். சிறுவர் கோலாட்டமும், நாதஸ்வரக் கோஷ்டிகளும், நீலக்கொடி, செங்கொடி என்பவற்றைத் தாங்கியவர்களும் முன்செல்ல, பெருந்திரளான மக்கள் பின்தொடர வண்டி ஊர்வலம் விமான நிலையத்துக்குச் செல்லும் பிரதான றோட்டில் அமைக்கப்பட்டிருந்த பந்தலையடைந்தது.

### முதலாவது வரவேற்பு

மேற்படி பந்தலிலே வயாவிளான் பொதுமக்கள் சார்பில் **திரு. கே. வி. சுப்பிரமணியம்** அவர்கள் ஒரு மகத்தான வரவேற்பளித்தார்கள். இதற்குத் தலைமை தாங்கிய முன்னாள் செனற்றர் **திரு. எஸ். ஆர். கனகநாயகம்** அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசியபோது குறிப்பிட்டதாவது :—

"இந்த வரவேற்பு கட்சிச் சார்பற்றது. இது மந்திரிகளுக்கு மாத்திரம் அளிக்கப்படுவதொன்றல்ல. சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கு மிடையில் 2,000 வருடங்களாக நிலவிய அன்புக்காகவே இது அளிக்கப்படுகிறதெனக் கூறவிரும்புகிறேன். இந்த நாடு இரண்டு சமூகத்துக்கும் உரியது. இதைத் துண்டாடக் கூடாது. இரு இனத்தவர்களும் சமாதானமாக வாழவேண்டும். பிணி, பசி, வேலையின்மை போன்ற பல பிரச்னைகள் எங்கள் எல்லோருக்கும் பொதுவானவை. ஆனால் ஒரு விடயத்தில்—அது பாஷைப் பிரச்னை—தற்போது முரண்பாடிருக்கிறது. இந்த நாட்டில் இரண்டு பாஷைகளும் இரண்டு மாங்கன்றுகளைப் போன்று அக்கம்பக்கமாக வளரவேண்டும். இரண்டு பாஷைகளும் ஒன்றையொன்று அழிக்கமுடியாது. இவை இரண்டும் இரண்டு கண்கள். இந்த நாடாகிய உடலுக்கு இரண்டு கண்களும் அவசியம். ஒரு கண் குருடாய்போவதை ஒருவரும் விரும்பவில்லை. இதற்கு வகை, வழி என்ன என்பதை இந்தப் பெரியார்கள் காண வேண்டும்.

இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன் சோழன் இராஜராஜன் திருகோணமலையில் பௌத்தர்களுக்காக ஒரு விகாரையைக் கட்டினான். இதைப்போல தமிழர்கள் சிங்களவர்களுக்காகச் செய்த பல தொண்டுகளைச் சரித்திரம் கூறுகிறது. இவ்விதமாக தமிழரும் சிங்களரும் இந்நாட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டும் ".

அடுத்து கௌரவ உள்நாட்டலுவல், கைத்தொழில் மந்திரி **கௌரவ மைத்திரிபாலா சேனநாயக்கா** தமிழில் பேசினார். இவர் தமிழில் பேச ஆரம்பித்ததும் அங்கு குழுமியிருந்த ஜனத்திரள் பலத்த கரகோஷஞ் செய்தது. மந்திரி அவர்கள் பின்வருமாறு பேசினார் :—

" என்னை தமிழில் பேசும்படி கேட்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் நான் 7 வருடங்கள் படித்தேன். இதனால் தமிழில் பேசத்தக்கதாயிருப்பதைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ்ப்பாணம் எனது இரண்டாவது ஊர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் உள்நாட்டு மந்திரியாக உங்கள் முன் வந்திருப்பது எனக்கு மேலும் மகிழ்ச்சியளிக்கிறது. இந்தநாட்டில் சிங்களவரும், தமிழரும் வித்தியாசமின்றி ஒரு தாயின் மக்களைப் போல் சீவித்தால் தான் இந்தச் சிறுநாடு முன்னேற்றமடையும். தமிழ் படிக்க 7 வருட காலத்தில் சந்தர்ப்பம் கிடைத்தபடியால் தமிழில் பேசுகிறேன். அரசியல் பற்றி என்ன வித்தியாசமிருந்தாலும் இந்நாட்டு மக்களாகிய நாங்கள் ஒற்றுமையாகச் சீவிக்க முடியுமென்று நான் நம்புகிறேன். பாஷையில் என்ன வித்தியாசமிருந்தாலும், அதை மறந்து எங்கள் முன்னேற்றத்துக்காக இரு மக்களும் ஒன்றாக நடந்தால்தான் இந்நாட்டுக்கு செல்வாக்கு ஏற்படும். மூன்று நாட்களில் இந்தப் பகுதிக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று நாங்கள் பார்க்க வந்திருக்கிறோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி மந்திரி **கௌரவ டயஸ் பண்டாரநாயக்கா** அவர்கள் பேசுகையில்—


"நான் இம்முறைதான் இங்கு முதன் முதலாக வந்திருக்கிறேன். துரதிர்ஷ்டவசமாக எனக்குத் தமிழ் பேச முடியாதிருக்கிறது. இதையிட்டு நான் வருந்துகிறேன். எனக்கு சிங்களமும் பேசத்தெரியாதென்று வெலிமடைப் பிரதிநிதி திரு. கே. எம். பி. இராஜரத்ன சொல்லுகிறார். எனவே நான் இரண்டு பாஷைகளையும் படிக்க வேண்டியவனாயிருக்கிறேன்.

எங்கள் கட்சியின் அடையாளம் கை. நாங்கள் அன்புக் கரத்துடன் உங்களிடம் வந்திருக்கிறோம். தமிழரசுக் கட்சியின் சின்னம் வீடு. இந்த வீட்டின் கதவை நன்றாகத் திறந்து வைக்கும்படி நான் அக்கட்சியினரைக் கேட்கிறேன். இப்படிச் செய்வதால் தமிழ், சிங்கள சாகியத்தினர் ஒற்றுமையாக வாழ முடியும்"—என்றார்.

அடுத்து போக்குவரத்து மந்திரி **கௌரவ பி. பி. ஜி. கலுகல்ல** அவர்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பேசியதாவது—

"தமிழரும் சிங்களவரும் சகோதரர்களாவர். நான் இங்கு சில சிங்கள மக்களைக் கண்டதால் சிங்களத்தில் சில வார்த்தைகளைப் பேசி உங்களோடு சகோதரர்கள் போல் வாழவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை கூறினேன்.

இதுவே இப்பகுதிக்கு எனது முதல் விஜயமாகும். நான் அரசியலில் இறங்கிய காலந்தொட்டு சிங்கள, தமிழ் நல்லுறவுக்காகப் போராடிவந்திருக்கிறேன்.



வயாவிளான் மக்கள் சார்பில் திரு. கே. வி. சுப்பிரமணியம் அவர்களால் அளிக்கப்பட்ட முதலாவது வரவேற்புக்கு மந்திரிகள் அழைக்கப்பட்டுச் சென்ற காட்சி. கூட்டத்துக்குத் தலைமை வகித்த முன்னாள் செனற்றர் எஸ். ஆர். கனகநாயகம் அவர்களையும் படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எல்லோரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள். நான் சட்டக் கல்லூரியில் படித்தபோது இங்கு சமுகமளித்திருக்கும் பாராளுமன்றப் பிரதிநிதிகளுடன் மிக நெருங்கிய நண்பனுகப் பழகினேன். அவர்களும் அப்படியே பழகினுர்கள். இதைப் போன்று நமது இரு சாகியத்தினரும் எம் நாட்டின் நன்மைக்காக ஒற்றுமையாக வாழ்வதற்கு ஏன் முயற்சிக்கக் கூடாது என நான் கேட்க விரும்புகிறேன்"—என்ருர்.

இந்த வைபவத்தின் போது மந்திரிகளுக்கும், இதர பிரமுகர்களுக்கும் தேநீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது. மூன்று மந்திரிகளுக்கும் தனித் தனியே மூன்று வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. தேநீர் விருந்தின்போது பாட்டுக் கச்சேரியொன்றும் இடம்பெற்றது. **கே. சுப்புலட்சுமி, கே. சந்தான லட்சுமி, கே. யோகாம்பாள்** எனும் மூன்று இள நங்கையர்கள் "**விநாயகா** . . **ஆடிக் கொண்டார் அந்த வேடிக்கைகாண**" என்ற பாட்டுகளை மிகவும் இனிமையாகப் பாடினுர்கள்.

மிகவும் விசேடமாகவும், அன்பாகவும் அளிக்கப்பட்ட இந்த முதல் வரவேற்புக்கு மந்திரிகள் எல்லோரும் **திரு. கே. வி. சுப்பிரமணியம்** அவர்களுக்கு நன்றி செலுத்தினுர்கள்.

இந்த வரவேற்புபசாரத்தின் பின்னர் மந்திரிகள் மூவரும் மூன்று வெவ்வேறிடங்களுக்குப் பிரிந்து சென்ருர்கள்.

கௌரவ நிதி மந்திரி அவர்கள் காரைநகரில் உள்ள கடற்படைத்தளத்துக்கும் கௌரவ உள்நாட்டலுவல், கைத்தொழில் மந்திரி அவர்கள் காங்கேசந்துறைச் சீமேந்துத் தொழிற்சாலைக்கும், கௌரவ போக்குவரத்து, கலாச்சார மந்திரி அவர்கள் கச்சேரியில் நடைபெற்ற பாராளுமன்றப் பிரதிநிதிகள் மகாநாட்டுக்கும், அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி உத்தியோகத்தர்கள் மகாநாட்டுக்கும் சென்ருர்கள்.

### காங்கேசந்துறையில்

மு.ப. 11.30 மணியளவில் சீமேந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் **திரு. சி. குமாரசுவாமி**, தொழிற்சாலை ஜெனரல் மனேஜர், **டாக்டர் ஜி. பொன்னம்பெருமா** ஆதியோர் சகிதம் சீமேந்துத் தொழிற்சாலைக்கு விஜயஞ் செய்த உள்நாட்டலுவல், கைத்தொழில் அமைச்சர் **கௌரவ மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்களை வேலை நிர்வாகஸ்தர் **திரு. ஜீ. டீ. சோமசுந்தரம்** அவர்கள் வரவேற்ருர். உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் **திரு. ரீ. பாலசுப்பிரமணியம்**, தொழிலாளர் சங்கத் தலைவர் **திரு. விஜயநாயகம்** ஆதியோரும் மந்திரிக்கு மாலையணிந்தனர். அங்கு நின்ற இதர பிரமுகர்கள் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்ட பின்னர் தொழிற்சாலை நடுவண் நிறுவப்பட்டுள்ள ஒரு மண்டபத்திலே பொது வரவேற்புக் கூட்டம் ஆரம்பமானது.

இதற்குத் தலைமை வகித்த **திரு. சி. குமாரசுவாமி** அவர்கள் மந்திரி அவர்களுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் உள்ள தொடர்பை விளக்கியதுடன் தொழிற்சாலை கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டதற்கு முன்னும் பின்னும் இருந்த நிலைமைகளை விரித்துரைத்தார். இத்தொழிற்சாலை தற்பொழுது இந்நாட்டின் மொத்தத் தேவையில் நான்கிலொரு பங்கு சீமெந்தையே உற்பத்தி செய்கிறதென்றும் ஆலோசிக்கப் பட்டுள்ள பத்துவருடத் திட்டம் அமுல் நடத்தப்படுமாளுல் 10 இலட்சம் தொன் சீமெந்தை இங்கு உற்பத்தி செய்யக் கூடுமென்றும் தலைவர் கூறினுர். அவர் மேலும் பேசுகையில் சீமெந்தின் விலையைக் குறைப்பதாளுல் போக்குவரத்து வசதிகள் தொழிலாளர் நிலைமைகள் ஆதியன சீர்திருத்தப்படவேண்டுமென்றும் சுட்டிக் காட்டினுர். வேலை நிர்வாகஸ்தர் **திரு. ஜி. டி. சோமசுந்தரம்** அவர்கள் தொழில் நிலைமைகளை விளக்கியதைத் தொடர்ந்து வேலை மேற்பார்வையாளர் **திரு. ரி. பாலசுப்பிரமணியம்** அவர்கள் பேசியபொழுது இத்தொழிற்சாலை 10 வருடமாக இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பாடுபட்டு வந்திருக்கிறதென்றும், காங்கேசந்துறைத் துறைமுகம் திறக்கப்பட வேண்டியது அவசியமென்றும், தொழிலாளர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளத் திட்டம் அத்தியாவசியமென்றும் வலியுறுத்தினுர். அடுத்து தொழிலாளர் சங்கத் தலைவர் **திரு. விஜயநாயகம்** அவர்கள் மிக விரிவானதோர் சொற்பொழிவாற்றுகையில் பிரச்னைகளை ஆராயும் விஷயத்தில் தொழிலாளர்கள் நிர்வாகிகளுடன் கலந்து பேசச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்ருர். வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் பொழுது இங்கிலாந்து நிதி மந்திரி தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடுவதை சுட்டிக்காட்டிய திரு. விஜயநாயகம் அவர்கள், இத் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினுர். தொழிலாளர்களின் நிலைமைகள் சீர்திருத்தப்பட வேண்டுமென்றும், அவர்கள் அரசாங்கத்தின் முன்னேற்றத் திட்டங்களை ஆதரிக்க ஆயத்தமாக இருக்கிருர்களென்றும் திரு. விஜயநாயகம் பேசி முடித்தார்.

பின்னர் காங்கேசந்துறைப் பட்டன சங்கத்தலைவர் பேசும் பொழுது தொழிற்சாலையின் நிலைமை உயர்ந்தால் நாடு வளருமென்றும் நாடு வளர்ந்தால் மக்கள் நிலைமை சிறப்புறுமென்றும் கூறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் தொழிலாளி, நிர்வாகி தொடர்பு தொழிற்சாலைக்கு அவசியமென்பதை எடுத்துக் காட்டி ஈற்றில் சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து பரவும் தூசியால் அவ்வட்டார மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை விளக்கி இதைத் தவிர்க்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

வேறு சில பிரமுகர்களின் பேச்சின் பின்னர் மந்திரி **மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்கள் தமிழில் பேசியதாவது :

" சிங்கள தமிழ் தொழிலாளர்கள் யாவரும் தமது தொழில்களை நன்கு செய்தால்தான் இந்த நாடு முன்னேற்றமடையும். இத்தீவில் இன்னும் நாலைந்து சீமெந்துத் தொழிற்சாலைகளைத் திறக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. அவற்றில் வேலை செய்ய உங்களில் பலர் தேவைப்படக்கூடும். தூசியைப் பற்றி அரசாங்கம் செய்யக் கூடியதைச் செய்யும். உலக வங்கியிலிருந்து சில நிபுணர்கள் வருகிறார்கள். அவர்களைக் கலந்து ஆலோசித்து இத் தொழிற்சாலையில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்".

கூட்டம் முடிந்தவுடன் தொழிலாளர்கள் யாவரும் தங்கள் வேலை நிலையங்களுக்குச் சென்றனர். தொழிற்சாலையில் சீமெந்து எப்படித் தயாரிக்கப்படுகிறதென்று ஆரம்பப்படியிலிருந்து மந்திரிக்குக் காண்பிக்கப்பட்டது. ஏறக்குறைய ஒரு மணித்தியாலம் வரை மந்திரி அவர்கள் பல்வேறு கட்டடங்களுக்கூடாக நடந்துசென்று எல்லா வேலைகளையும் கவனித்தார். இயந்திரக் கட்டுப் பாட்டு அறையில் இரசாயன நிபுணர் **திரு. சரவணபவான்** அவர்கள் பல மின்சக்திப் பொத்தான்களை அமுத்தி அவற்றின் உபயோகங்களை மந்திரிக்கு விளக்கினர். இத் தொழிற்சாலையில் இரசாயன ஆராய்ச்சி வேலையில் நியமிக்கப்பட்டிருக்கும் பெண் உத்தியோகத்தர் **செல்வி சிற்றம்பலம்** அவர்களை மனேஜர் திரு. பொன்னம்பெருமா அவர்கள் மந்திரிக்கு அறிமுகப் படுத்தினர்.

பிற்பகல் 1.30 மணியளவில் மூன்று மந்திரிகளும் தத்தம் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு மதிய போசனத்துக்குத் திரும்பினர்.

### யாழ்ப்பாண நகரமண்டபத்தில்

தொடர்ந்து 3.30 மணியளவில் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் யாழ்ப்பாண சேமிப்பு மகாநாடு ஆரம்பமாகவிருந்தது. பல்வேறு சேமிப்புக் குழுக்களையும் சேர்ந்த பல பெண்மணிகள் நகர மண்டப வாசலில் வரிசையாக அணிவகுத்து நின்றனர். இவ்வியக்கத்தின் ஆரம்பகர்த்தாவான இராசவாசல் முதலியார் **திரு. சி. தியாகராஜா** அவர்களும், மாவட்ட அதிபர் **திரு. எம். ஸ்ரீகாந்தா,** சேமிப்புப் பகுதி உத்தியோகத்தர்கள், **திரு. ஈ. பி. இராசையா** முதலிய பல பிரமுகர்களும் மந்திரிகளை வரவேற்க வந்திருந்தனர். பிற்பகல் 4 மணியளவில் **கௌரவ டயஸ் பண்டாரநாயக்கா** அவர்களும், **கௌரவ மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்களும் வேறு பல பிரமுகர்களும் நகரமண்டப வாசலில் வரவேற்கப்பட்டு மண்டப மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மந்திரிகள் ஆசனத் தமர்ந்ததும்,

" **வந்தனந் தந்து நின்றேமே**
**மாபெருந்தலைவா மதியுறும் அமைச்சரே**
**வந்தனந் தந்து நின்றேமே** "

என்று ஆரம்பமாகும் ஓர் வரவேற்புப்பாடலை நான்கு சிறுமிகள் பாடினார்கள்.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்த யாழ்ப்பாண மாவட்ட அதிபர் **திரு. ஸ்ரீகாந்தா** அவர்கள் பேசியதாவது :—

" இன்றைய தினம் யாழ்ப்பாண தேசிய இயக்கத்துக்கு மறக்க முடியாத ஓர் தினமாகும். வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட ஒரு வருடத்தைத் தவிர மற்ற வருடங்களிலெல்லாம் நாம் எமது இலக்குத்தொகையைச் சேமித்திருக்கிறேம். இலங்கையில் சனத் தொகை பெருகிவருகிறது. எனவே அரசாங்கம் உற்பத்தியைப் பெருக்கக் கடமைப்பட்டிருக்கிறது. தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருக்கின்றன. இதற்கான பணத்தைச் சேர்ப்பதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. **ஒன்று கமம், கைத்தொழில் என்பவற்றை அபிவிருத்தி செய்தல் ; மற்றது வாழ்க்கையைச் சிக்கனப் படுத்துதல்.**

இவ்வழிகளில் பணத்தைச் சேமித்து அரசாங்கத்துக்கு உதவுவதால் நாம் எங்களுக்கும் எதிர்வரும் சந்ததிக்கும் நன்மை செய்கிறேம். இவ்வியக்கத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதில் பல பெரியார்கள் முன்னின்று உழைத்தார்கள். இவர்களில் இராசவாசல் முதலியார் திரு. சி. தியாகராஜா அவர்கள் செய்த சேவை மிக முக்கியமானது. அவர் நெடுங்காலம் வாழ்ந்து மேலும் சேவை செய்தற்கு இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்க வேண்டும்".

பின்னர் **திரு. சி. தியாகராஜா** அவர்கள் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் தேசிய சேமிப்பு இயக்கம் ஆரம்பித்த விதத்தை விரிவாகக் கூறி மந்திரிகளுக்கும், பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அடுத்து **கௌரவ மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்கள் மகாநாட்டை அங்குரார்ப்பணஞ் செய்து வைத்துத் தமிழில் பேசியதாவது :—

" இவ்விழாவைத் தொடக்கி வைக்க நான் இங்கு சமுகமளித்திருப்பதில் பெருமையடைகிறேன். நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 வருடங்கள் யாழ்ப்பாணத்தில் படித்தேன். யாழ்ப்பாணத்தை எனது இரண்டாவது ஊராக நான் மதிக்கிறேன். யாழ்ப்பாண மக்களுக்கு சேமிப்பைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எனினும் இந்த விழாவைத் தொடக்கி வைக்கும்படி கேட்டிருப்பதால் இதை மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கிறேன்.

இன்றைய அரசாங்கம் தேசீய வருமானத்தைப் பெருக்க உதவி செய்கிறது. இதற்கு சேமிப்பு மிகவும் உதவியளிக்கும். தேசீய வருமானம் என்றால் என்ன ? மக்களிடம் அதிக வரி அறவிடுவதல்ல. அவர்கள் வருவாயில் ஒரு பகுதியை அரசாங்கம் பெறுவதே தேசீய வருமானம் ஆகும்.

தேயிலை, ரப்பர், புடவை இயந்திரங்களை அமைக்க வருமானம் கூடும். மனிதன் நன்கு வேலை செய்ய வேண்டும். இதற்கு எமது அரசாங்கம் முயலுகிறது. தொழிலாளருக்கு நல்ல சாதனங்களைக் கொடுக்க நாம் முயலுகிறோம். இதற்குப் பணம் வேண்டும். இதற்கான வழிகளில் ஒன்று ஏற்றுமதியை அதிகரித்து உற்பத்தியைப் பெருக்குதல் ; மற்றது சேமிப்பு. இதுதான் சுகமான சிறந்த முறை.

**ஒவ்வொரு மனிதனுக்கும் எப்பொழுதும் பிற்காலத்திலும் பணம் தேவை. இதனால் பணத்தை ஒவ்வொருவரும் சேமிக்க வேண்டும்.** அதிகமான மக்கள் சேமிக்க தேசீய வருமானம் பெருகும். தேசீய வருமானம் பெருக அரசாங்கம் பணம் பெறும்.

இலங்கையிலுள்ள பல பிரச்னைகளை, மொழிப் பிரச்னையைக் கூடத் தீர்க்க சேமிப்பு அவசியம். உதாரணமாக ஒருவருடைய உணவை ஐந்துபேர் பங்கிட நினைத்தால் சண்டை உண்டாகும். போதிய உணவிருந்தால் சண்டை இல்லை. எனவே இந்த இயக்கத்துக்கு ஆதரவு தரும்படி தேசத்தின் பேரால் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேமிப்புத்துறையில் யாழ்ப்பாணம் முதலிடம் வகிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். சென்ற வருடம் உங்கள் இலக்குத் தொகை 50 இலட்சத்து 500 ஆக இருந்தபோதிலும் நீங்கள் 55 இலட்சம் சேர்த்தீர்கள். இவ்வருடம் 60 இலட்சம் திரட்ட எண்ணியிருக்கிறோம். தலைமுறை தலைமுறையாக வெற்றி ஈட்டிய நீங்கள் இம்முறையும் வெற்றி யீட்டுவீர்கள்.

சேமிப்புப் பத்திரங்கள் மூலம் சேமித்தல் அவசியம். இதை வாங்குதல் தேச பக்தியின் சின்னமாகக் கருதப்பட வேண்டும். ஏழையாக இருந்தாலும் சிறு தொகையைச் சேர்த்துக் கொடுத்தல் வீரச் செயலாகும்.

இந்தத் தேசம் உங்களுடையது. உங்கள் பிள்ளைகளுக்கு சேமிப்பு பாதுகாப்பாகும் ”

நிதி மந்திரி **கௌரவ டயஸ் பண்டாரநாயக்கா** அவர்கள் கூறியதாவது—

“ தமிழ் பாஷையில் பேச முடியாதிருப்பதை மன்னிக்குமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசாங்கம் நான்கு மாதங்கள் தான் நிலைக்கும் என்றார்கள். இப்போது மூன்று மாதங்கள் கடந்து விட்டன. அடுத்த முறை நான் மந்திரியாக இங்கு வந்தால், இவ்விதமான அங்குரார்ப்பணக் கூட்டங்களில் தமிழில் பேசுவேன்.

இலக்குத் தொகைகளை நிர்ணயிப்பது மிகவும் சுலபமான வேலை. ஆனால் சேமிப்பது தான் கஷ்டம். எனினும் யாழ்ப்பாண சேமிப்பு இயக்கம் அதன் இலக்குத் தொகையைத் திரட்டுவதில் ஒரு போதும் தோல்வியடைந்ததில்லை.

மூன்று சத விகித வட்டியை மாத்திரம் பெறுவதற்கு நீங்கள் சேமிக்கவில்லை. எங்கள் நாட்டின் தேசீய பொருளாதார அபிவிருத்திக்காகவே நீங்கள் சேமிக்கிறீர்கள். இதனால் ஒரு புதிய தேசத்தை நீங்கள் உருவாக்கக் கூடும்.

தேசீய வருமானத்தை அதிகரிக்கும் முயற்சியில் நாம் ஏன் ஒத்துழைக்க வேண்டுமென உங்களில் அநேகர் கருதக்கூடும். தமிழ் பிரதேசங்களின் வருமானத்தைக் காட்டிலும் அதிகமான பணத்தை அவற்றுக்குச் செலவிடுகிறோம் என்பதை மட்டும் கூறவிரும்புகிறேன். நாம் சமத்துவமாக நடக்கிறோம் என்பதைக் குறிப்பிடவே இதைச் சொல்லுகிறேன். அண்மையில் கந்தளாயில் சீனி ஆலை ஒன்றைத் திறந்தோம். இதை நாம் வேறிடத்தில் திறந்திருக்க முடியாதா ? முடியும். ஆனால் பொருத்தமான இடத்தில் அது எங்கிருந்தாலும் அங்கு தொழிற்சாலைகளைத் திறப்பதே எமது கொள்கை.

இந்த நேரத்தில் மொழிப் பிரச்னையும் கடந்த கால சம்பவங்களும் எனக்கு நினைவில் வராமலில்லை. அது சில காடையர்களால் ஏற்பட்டது. எனது தொகுதியில் எவ்வித அசம்பாவிதமும் நிகழவில்லை.

**சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் அருணாசலம்** ஆகிய தலைவர்களுக்குப்பின் தமிழ்ப்பிரமுகர்கள் எவரையும் வரவேற்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. எங்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காண விரும்பும் எந்தத் தமிழ் பிரமுகர்களையும் நான் வரவேற்றுக் கலந்துரையாட ஆயத்தமாயிருக்கிறேன்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நம்புங்கள். இந்த அரசாங்கம் இந்நாட்டு மக்கள் விஷயத்தில் எதுவித பாரபட்சமுமின்றி நியாயமாக நடக்கும்".

அசைஸ் கமிஷனர் **டாக்டர் எச். டபிள்யு. தம்பையா** அவர்கள் பேசுகையில் நிதி மந்திரி தனது மாணவனென்றும் சிறுவயதிலேயே மிகவும் உற்சாகமும் கெட்டித்தனமும் உள்ளவர் என்பதைத் தனக்குத் தெரியுமென்றும் கூறினர். சட்டத்துறையில் மிக உயர்ந்த பதவிக்கு வந்திருக்கக் கூடிய மந்திரி அவர்கள் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே அரசியலில் ஈடுபட்டிருக்கிருரென்றும் இவர் நிதி மந்திரியாக இருக்கும் காலத்தில் அநேக பிரச்னைகளை இயற்கையாகவே அவருக்குள்ள நேர்மைத் திறத்தின் மூலம் தீர்த்து வைப்பாரென்றும் மேலும் சொன்னர். மந்திரிகள் எமக்கு நீட்டும் அன்புக்கரத்தை ஏற்று நாமெல்லோரும் இந்நாட்டவர்களென்று நினைத்து நடக்காவிட்டால் இந்நாட்டுக்கு விமோசனமே இல்லையென்று கூறிமுடித்தார் திரு. தம்பையா.

பின்னர் சேமிப்புச் சம்பந்தமான பேச்சுப்போட்டிகளில் சிறந்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிதி மந்திரி பரிசு வழங்கினர். தமிழ்ப் பேச்சில் வெற்றி பெற்ற **செல்வன் அப்பாத்துரை, திருமதி கணபதிப்பிள்ளை** என்போர் இம் மகாநாட்டிலும் வெகு சிறப்பாகப் பேசினர்கள். இவர்களின் பேச்சு சேமிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் ஒரு அம்சமாக இருந்தது.

சேமிப்பு அதிகாரிகள், **திரு. ஈ. பி. இராசையா** ஆதியோர் உட்பட வேறு சிலர் பேசியதுடன் கூட்டம் முடிவெய்தியது.



**யாழ்ப்பாண மாவட்ட சேமிப்பு வார அங்குரார்ப்பண விழாவில் கௌரவ நிதி மந்திரி பேசிக்கொண்டிருக்கிறுர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P... O ROAD
NALLUR, JAFFNA
No.........



### யாழ்ப்பாண மத்திய கல்லூரியில்

மேற்படி கூட்டம் முடிவடைந்ததும் மாலை 7 மணியளவில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் கலைவிழா ஆரம்பமானது. பிரதேசக் கலாமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கலைவிழாவுக்குப் பெருந்தொகையான மக்கள் சமுகமளித்தனர்.

**கௌரவ டயஸ் பண்டாரநாயக்கா** அவர்களும் **கௌரவ மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்களும் திருமதி டயஸ் பண்டாரநாயக்காவும் இரவு 7.15 மணியளவில் மத்திய கல்லூரியின் மண்டபத்துக் கருகேயுள்ள வெளியில் வரவேற்கப்பட்டனர். **கலைப் புலவர் க. நவரத்தினம்** அவர்கள் நிதி மந்திரிக்கும், மாவட்ட அதிபர் **ஸ்ரீகாந்தா** உள்நாட்டலுவல்கள் மந்திரிக்கும் முறையே மாலை சூட்டினர்.

**திரு. ஸ்ரீசாந்தா** அவர்கள் தமது வரவேற்புரையில் கூறியதாவது —

"பிரதேசக்கலைமன்றத்தின் சார்பாகவும் யாழ்ப்பாணமக்களின் சார்பாகவும் மந்திரிகளாகிய உங்களை நாம் வரவேற்கிறோம்.

யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை, கைப்பணி விழாவை மந்திரிகள் திறந்து வைத்தபின் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா திந்தமிழில் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரக் கணக்கான வருடங்களாக நாம் எங்கள் கலாச்சாரத்தையும்பாரம்பரியங்களையும்பேணிக்காத்து வருகிறோம். இவை அழியாது நிலைபெற்று வருவதற்கு மூல காரணமானவர்கள் எமது கலைஞர்களாவர். இவர்களை நாம் கௌரவிக்க வேண்டியது அவசியமாகும். முற்காலத்து அரசர்கள் கலைஞர்களுக்குப் பெருமதிப்புக் கொடுத்து வந்திருக்கிறார்கள். தற்பொழுது இந்தியாவில் ஜனாதிபதி டாக்டர் இராசேந்திரப் பிரசாத் அவர்கள் வருடா வருடம் கலைஞர்களைக் கௌரவித்து வருகிறார். அவ்வாறாக இலங்கையிலும் கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். இங்ஙனம் செய்தல் எதிர்கால சந்ததியினருக்கு கலையில் ஆர்வமளிக்கும். எனவே அரசாங்கம் கலையை வளர்ப்பதற்கு ஆவன செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன் ".

இவ்வாறு மாவட்ட அதிபர் பேசிக் கொண்டிருகையில் போக்குவரத்து மந்திரி **கௌரவ கலுகல்ல** அவர்களும் அங்கு வந்து சேர்ந்தார்.

பின்னர் மூன்று மந்திரிகளும், யாழ்ப்பாணப் பிரதிநிதி **திரு. அல்பிரட் துரையப்பா** அவர்களும் குத்துவிளக்கைக் கொழுத்தி கலைவிழாவை அங்குரார்ப்பணஞ் செய்து வைத்தார்கள்.

**கௌரவ மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்கள் தமிழில் பேசியபோது, சிங்கள கலாச்சாரமும், தமிழ் கலாச்சாரமும் இந்நாட்டில் பாதுகாக்கப்பட வேண்டியவை என்றும் இவை மென்மேலும் வளர்ந்து எங்கள் முன்னேற்றத்துக்கும் புகழுக்கும் உதவ வேண்டுமெனத் தான் விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து மந்திரிகளும் யாழ்ப்பாணப் பிரதிநிதி உட்பட வேறு சில பிரமுகர்களும் மத்தியகல்லூரி மண்டபத்துக் கருகே தெருவோரமாக அமைக்கப் பட்டிருந்த மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்கள் அமர்ந்திருந்தபோது தமிழரின் சரித்திரம், கலைத்திறன், நடனம், கும்மி, கோலாட்டம் என்பவற்றை விளக்கும் எட்டு காட்சி இரதங்கள் மந்திரிகளுக்குக் காண்பிக்கும்படி பவனி கொண்டு வரப்பட்டன.

முதலாவதாக யாழ்பாடியின் சரித்திரத்தை விளக்கும் இரதம் பவனி வந்தது. அதிலே மணிபல்லவ மன்னனும் அரசியும் தோழியர் சகிதம் அரியாசனத்து வீற்றிருக்க, யாழ்பாடி திரைக்குப் பின்னாலிருந்து மன்னனைப் புகழ்ந்துபாடிய காட்சி மிகவும் எழில் மிக்கதாயிருந்தது.

அதையடுத்து கும்மியடிக்கும் பெண்களைக் கொண்ட இரதமும், மூன்றாவதாக துரோபதை பாரிசாத மலர் பெறும் காட்சி இரதமும் பவனிவந்தன. நான்காவதாக காவடி நடனம் வந்தது. ஐந்தாவதாக வந்த காட்சியில் பத்து வயதுச் சிறுவனொருவன் தலையிலே செம்பையும், கையில் தட்டத்தையும் வைத்துக் கொண்டு காலின் கீழ் உள்ள உரல்மீது நின்று ஆடிய கரகம் மிகவும் மெச்சத் தக்கதாயிருந்தது. ஆறாவது காட்சி ஓலைக்குடிலில் வசிக்கும் ஒரு குடும்பத்தில் உள்ள தாய், தகப்பன், பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து நாட்டுக் கோலாட்டம் அடித்து மகிழ்வதைச் சித்தரித்தது. ஏழாவது காட்சி **"ஏலம் ஏலோ ஏலேலோ"** என்ற கப்பற் பாட்டுடன் வள்ளம் ஒன்றைப் படகோட்டிகள் தாங்குவதையும், எட்டாவது காட்சி அரிவுவெட்டு நடனமொன்றையும் சித்தரித்தன. (ஜனநெருக்கடி மிகுந்திருந்தமையாலும், கலைமன்றப் பொறுப்பாளர்களைச் சந்திக்க முடியாமையாலும் இது பற்றிய பூரணமான, தெளிவான விவரங்களை அறிய முடியவில்லை. இவ்விழாவில் பல நாடகங்களும், நடனங்களும் இடம் பெற்றதுடன் பல்வேறு மார்க்கங்களில் கலை, கைப்பணி வளர்ச்சிக்காக உழைத்த பல பெரியார்களும் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். இக்கலை மன்றத்தையும், கலைஞர்களையும் பற்றிய கட்டுரைகள் எமது சஞ்சிகையில் படிப்படியே இடம் பெறும்).

## இரண்டாம் நாள்


காலை 9.30 மணியளவில் சுண்டிக்குளியிலுள்ள யாழ்ப்பாண பரியோவான் (சென்ற். ஜோன்) கல்லூரிக்கு உள்நாட்டலுவல்கள் மந்திரி **கௌரவ மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்கள் விஜயஞ் செய்தபோது கல்லூரி அதிபர் **திரு. ஏ. டபிள்யு. இராஜசேகரம்** அவர்கள் மந்திரியை வரவேற்றுப் பேசுகையில் அக்கல்லூரியின் பழைய மாணவராகிய **திரு. சேனநாயக்கா** நாட்டின் பொறுப்புள்ள மந்திரியாக நியமனம் பெற்றுத் தமது பழைய கல்லூரிக்கு விஜயஞ் செய்திருப்பதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தார்.

**திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்கள் பேசுகையில் கூறியதாவது :—

" நான் 7 வருடங்களை இக்கல்லூரியில் கழித்தேன். அதாவது 1927 ம் ஆண்டு தொடக்கம் 1934 ம் ஆண்டு வரை நான் இங்கு கல்வி கற்றேன். சுருக்கமாகச் சொன்னால் யாழ்ப்பாணம் எனது இரண்டாவது சொந்த ஊரைப்போன்றதாகும்.

தமிழர்களாகிய நீங்கள் எங்களது சகோதரர்கள். ஒரு தேசத்தின் மக்களாக நாம் உங்களுடன் சேர்ந்து வாழ விரும்புகிறோம். எங்களுக்கிடையில் தற்போது சிறிய வித்தியாசங்கள் இருப்பினும், நாம் ஒன்று சேர்ந்து அவற்றைத் தீர்க்க வழி காணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலை விழாவின்போது யாழ்ப்பாடியின் சரிதத்தை விளக்கும் நாடகக் குழுவினரைக் கொண்ட இவ்வழகிய இரதம் முதன்முதலாகப் பவனிவந்தது. யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. ரி. பாலச்சந்திரன் அவர்களும், கலைமன்றக் குழுவினரும் இதை ஒழுங்கு செய்தார்கள்.

சமூக நல்லுறவுக்கான எதையும் செய்ய நான் ஆவலோடிருக்கிறேன். இன்னொரு கட்சியுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்த முக்கியஸ்தர்களில் நானும் ஒருவன். ஐக்கிய இலங்கைக்காக எனது வாழ்வின் எஞ்சிய பாகத்தைச் செலவிட நான் தயாராக இருக்கிறேன்.

ஒரு நாடு பொருளாதார அபிவிருத்தித் துறையில் அபிவிருத்தி அடையாவிட்டால் அங்கு அமைதி நிலவுமென்று கூறமுடியாது. அவ்விதமான நாட்டில் பாஷைப் பிரச்னை போன்ற பிரச்னைகள் ஏற்படுவது வழக்கம். நமது பிரச்னைகள் சீக்கிரத்தில் மறைந்துவிடுமென நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மக்களின் அன்புக்கரத்தை நான் உங்களுக்கு நீட்டுகிறேன். உங்கள் கரத்தையும் எங்களுக்கு நீட்டுங்கள். நாம் எல்லோரும் சேர்ந்து ஐக்கிய இலங்கையொன்றை அமைக்க முயற்சிப்போம்".

**திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்கள் இங்கு சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கையில் மற்ற மந்திரிகள் புதிய செக்கிரட்டேரியட் கட்டடத்தை நிறுவுவதற்கான இடத்தைப் பார்வையிட்டதுடன் சில தூதுக்கோஷ்டிகளையும் அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

**பண்ணைப் பாலத் திறப்பு விழா**

மு.ப. 10.30 மணியளவில் மூன்று மந்திரிகளும் பண்ணைப் பாலத்துக்கு விஜயஞ்செய்தனர். யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. அல்பிரட் துரையப்பா, யாழ்ப்பாண மாவட்ட அதிபர் திரு. ஸ்ரீகாந்தா, அரசாங்கக் கூட்டு வேலைப் பகுதி அதிபர் திரு. எச். ஆர். பிரேமரத்ன, தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதி திரு. செனிவிரத்ன யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. ரி. பாலச்சந்திரன், தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. சாமுவேல் தம்பையா, கட்டு

வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி அவர்களால் கலைக்காட்சிக்கென ஒழுங்கு செய்யப்பட்ட அரிவிவெட்டு நடனத்தில் பங்குபற்றிய நங்கையர் இரதம் இவ்வாறு காட்சியளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைப் பகுதியின் பிரபல உத்தியோகத்தர்கள் முதலிய பல பிரமுகர்கள் மந்திரிகளுடன் வந்தார்கள்.

தீவுப் பகுதிப் பிரதிநிதி **திரு. வீ. ஏ. கந்தையா** பண்ணைப் போக்குவரத்துச் சங்க உத்தியோகத்தர்கள், ஆதியோர் ஏற்கெனவே வந்து மந்திரிகளின் வருகையை எதிர்பார்த்து நின்றனர். பண்ணைப் பாலம் பூரணமாக நிறுவப்பட்டமை சகல தீவு மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடியதாதலால், இவ்வைபவத்தில் அத்தீவுகள் யாவற்றையும்சேர்ந்த மக்கள் பங்குபற்றினர்.

படகுகள் குறுக்கே செல்லத்தக்க முறையில் வழி விட்டுக் கொடுக்கக்கூடிய கடப்புப்பாதை நிறுவப்பட்டுள்ள இடத்தில் அழகானதோர் பந்தல் அமைத்து வரவேற்புக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

மந்திரிகள் அங்கு வந்து சேர்ந்ததும் பண்ணைப் போக்குவரத்துச் சங்க உத்தியோகத்தர்களும், பல பிரமுகர்களும் அவர்களுக்கு மலர்மாலை சூட்டி வரவேற்றுர்கள். தீவுப் பகுதிப் பிரதிநிதி திரு. வீ. ஏ. கந்தையா அவர்கள் பிரமுகர்கள் யாவரையும் மந்திரிகளுக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்.

தொடர்ந்து அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி அதிபதி **திரு. பிரேமரத்ன** அவர்கள் பேசுகையில், இப்பாலம் சகல தீவு மக்களுக்கும் வசதியளிக்கத் தக்கதொன்றென்றும், நெடுந்தீவு மக்கள் பலனடையத்தக்கதாக குறிகாட்டுவான் பாலம் அமைத்து முடிக்கப்படும் போதுதான் இத்திட்டம் பூரணமடைந்ததாகக் கருதப்படுமென்றும் கூறி இப்பாலத்தால் ஏற்படத்தக்க வேறு நன்மைகளையும் விவரித்த பின்னர் இதனைத் திறந்துவைக்குமாறு கௌரவ போக்குவரத்து மந்திரி திரு. **கலுகல்ல** அவர்களை வேண்டிக்கொண்டார்.

பாலத்தின் குறுக்கே கட்டப்பட்டிருந்த நாடாவை வெட்டி அதனைத் திறந்து வைத்த **மந்திரி** அவர்கள் கூறியதாவது :—

"இப்பாலத்தைத் திறந்து வைக்கும் சலாக்கியம் எனக்குக் கிடைத்தமையையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதனை நிறுவியதன் மூலம் யாழ்ப்பாண மக்களையும், தீவுமக்களையும் ஒன்று சேர்த்து விட்டோம். தீவுமக்கள் பல வருடங்களாகப் பட்ட கஷ்டங்களுக்கு இன்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. தீவுகள் குடாநாட்டுடன் இணைந்துவிட்டதைப்போன்று இலங்கையின் இருபெரும் சமூகங்களும் ஒன்றுகச் சேர்ந்து வாழ்தல் முக்கியமாகும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது இனவேற்றுமைக்குத் தூபமிடப்பட்ட பல நிலைமைகளை நாம் எதிர்த்துப்போராட நேரிட்டது. தமிழர்களை எங்கள் இளைய சகோதரர்களாக நடத்தும்படி இந்நாட்டு மக்கள் எங்களுக்குத் தீர்ப்பளித்திருக்கிறுர்கள். உங்கள் பிரதிநிதி அவர்கள் இத்தீவுகளின் தேவைகளை எனக்குச் சொல்லியிருக்கிறுர். அவர் வேண்டியவற்றில் அநேகமானவற்றை நான் வழங்கியுள்ளேன். **குறிகாட்டுவான் பாலம் முடிவுறும்வரை, இப்பாலத் திட்டம் பூரணமடைந்ததாகக் கருதப்படமுடியாது. இந்த வேலைக்கு நான் முதலிடம் கொடுப்பேன்.** இதற்கு வேண்டிய பணத்தை கௌரவ நிதி மந்திரி அவர்கள் உதவுவார்களென நம்புகிறேன். அவரும், நாங்கள் எல்லோரும் உங்கள் வரவேற்பையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறோம். தமிழ் பேசப் பழக வேண்டுமென்று நான் நேற்றைய தினம் தீர்மானித்தேன் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அடுத்த முறை நான் இங்கு வரும்போது தமிழில் பேசுவதுடன் எனது ஆசிரியராகிய திரு. வி. ஏ. கந்தையா அவர்களையும் தமிழ் பேச்சில் தோற்கடிப்பேன். இப்பொழுது உங்கள் முன் தமிழில் பேச முடியாதிருப்பதையிட்டு வருந்துகிறேன்.

இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக நாம் எல்லோரும் ஒன்றுபட்டுழைப்போமாக. அரசாங்கக் கட்டு வேலைப் பகுதி உத்தியோகத்தர்களையும் உங்கள் பிரதிநிதியையும், அரசாங்க அதிபரையும் இந்த வேலைத் திட்டத்தை நன்கு நிறைவேற்ற உழைத்தமைக்காகப் பாராட்டுகிறேன்."

அடுத்து பண்ணை ஆயச் சங்கத் தலைவர் **திரு. கே. சதாசிவம்** அவர்கள் பேசுகையில் பல வருடங்களாக மேற் கொள்ளப்பட்டு வந்த இப்பால அமைப்பு வேலை முடிக்கப்பட்டதையிட்டு அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்தார். **18 ஆண்டுகளுக்கு முன்னர் 19 உயிர்களைப் பண்ணைக் கடல் பலி கொண்ட உருக்கமான சம்பவத்தைக்** கூறிய திரு. சதாசிவம் அவர்கள் அதன் சார்பில்இங்கு ஓர் ஞாபகச் சின்னம் அமைப்பது பொருத்தமானதாகும் என்றுர். குறிகாட்டுவான் றேட்டு அகலமாக்கப்பட வேண்டிய அவசியத்தையும் திரு. சதாசிவம் மந்திரிகளுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர் அரசாங்க மாவட்ட அதிபர் **திரு. ஸ்ரீ காந்தா** அவர்கள் பேசுகையில், இன்றைய தினம் உண்மையிலேயே யாழ்ப்பாண மக்களுக்கு நல்ல நாளென்றும், பெரியதோர் குறை நீங்கிய நாளென்றும் கூறி சகல மக்கள் சார்பிலும் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்ணைப்பாலத்தைப் போக்குவரத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல அவர்கள் திறந்துவைத்த காட்சி. தீவுப் பகுதிப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா அவர்களையும் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. அல்பிரட் துரையப்பா அவர்களையும் இதர பிரமுகர்களையும் படத்திற்காண்க.

அடுத்து தீவுப் பகுதிப் பிரதி நிதி **திரு. வி. ஏ. கந்தையா** அவர்கள் பேசுகையில் கூறியதாவது :—

"இன்றைய நாள் தீவு மக்களுக்கு மிகவும் அருமையான ஒரு நாள். **பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள்.** ஆண்டாண்டுகளாகத் தீவு மக்கள் கஷ்டப்பட்டார்கள். அவர்களுடைய கஷ்டங்கள் இனிமேல் குறைந்து விடும். **தீவுப்பகுதி மக்கள் தமிழை வளர்க்கப் பாடுபட்டார்கள். தமிழ் பண்பாட்டைப் பாதுகாத்தார்கள்.** இப்போது யாழ்ப்பாணத்துடன் இணைகிறார்கள். இதனால் நல்ல பழக்கங்களும் உண்டாகலாம். தீய பழக்கங்களும் உண்டாகலாம். (சிரிப்பு).

**கௌரவ மந்திரி அவர்களே !** சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் தீவு மக்கள் பல ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டார்கள். நான் சிறுவயதில் இக்கடலைக் கடந்து செல்வதில் அனுபவித்த கஷ்டங்கள் இன்னும் எனக்கு ஞாபகமிருக்கின்றன. இப்பாலத்தை நிறுவி முடித்த இன்று தான் நான் மகிழ்ச்சியடையக் கூடியதாயிருக்கிறது. இதற்கு உதவியமைக்கு தீவுப்பகுதி மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**ஐயா !** நீங்கள் மந்திரியாக நியமனம் பெற்ற சொற்ப காலத்துள் இன பேதம் பாராட்டாது எல்லோருக்கும் நியாயமாக நடக்க முயற்சித்திருக்கிறீர்கள். இதை நான் வரவேற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அபிவிருத்தியின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டார்கள். **சமூகங்களின் ஒற்றுமை அடிப் படையில்தான் இது சாத்தியமாகுமெனச் சொல்ல விரும்புகிறேன்.** சிங்களவரும், தமிழரும் பல நூற் றுண்டுகளாக இந்நாட்டில் ஒற்றுமையாக வாழ்ந் திருக்கிறார்கள். எதிர்காலத்திலும் இவர்கள் அவ் வாறே வாழக்கடமைப்பட்டிருக்கிறார்கள். வாழவேண் டியவர்கவும் இருக்கிறார்கள். இதற்கு இடைஞ்ச லாயிருப்பது பாஷைப் பிரச்னே. இதனல் ஏற்பட்ட காயத்திலிருந்து இன்னும் இரத்தம் வடிந்துகொண் டிருக்கிறது. இதை நிறுத்த நடவடிக்கைகள் எடுக் கப்படுவது எனக்குத் தெரியும். ஆனல் இரத்தம் வடிவதை மாத்திரம் நிறுத்துவது போதாது. காயத்தை முற்றுக மாற்ற வேண்டும். இதற்கு நாங்கள் கோரும் ஆட்சிமுறைதான் மிகவும் பொருத்தமானது.

நீங்கள் இங்கு சமுகமளித்தமைக்கும் நேற்றைய கூட்டத்தில் குறிகாட்டுவான் பாலத்தை நிறுவ ஒன் றரை இலட்சம் ரூபா ஒதுக்குவதற்கு உடன்படியாக இணங்கியமைக்கும் நன்றி தெரிவித்து எனது பேச்சை முடிக்கின்றேன்."

**கௌரவ நிதி மந்திரி** அவர்கள் கூறியதாவது :—

"இந்த நாட்டின் ஒவ்வொரு அங்குல நிலமும் பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட வேண்டும். இந்தப் பாலத்தை நிறுவியதால் தீவுப் பகுதிகள் இனிமேல் அபிவிருத்தி அடைய இட முண்டு. குறிகாட்டுவான் பாலத்துக்கு வேண்டிய பணத்தை நான் அனுமதிக்கிறேன். இங்கு ஒரு பாலத்தை மண்ணுனும் கல்லாலும் நிறுவி விட் டோம். இனிமேல் சிங்களருக்கும் தமிழருக்குமிடை யில் **ஒரு ஒற்றுமைப் பாலத்தை** நிறுவ முயற்சிப் போமாக.

காயத்தை மாற்ற வேண்டுமென்ற அவா எங் களுக்கும் உண்டு. சிகிச்சை முறையில் வைத்தியர் களுக்குகிடையில் பேதம் ஏற்படுவது இயற்கை. ஆனல் எல்லோரும் ஒன்று சேர்ந்தால் நல்ல சிகிச்சை செய்து வெற்றிகாண முடியும். வீண் எண்ணம் ஒழியும். இதற்கு நான் ஆயத்தமாயிருக்கிறேன்."

நிதி மந்திரி அவர்கள் பேசி முடிந்த பின்னர் இதுவரை உயர்த்தப்பட்டிருந்த கடப்புப் பாலத்தட்டு தெரு மட்டத்துக்குத் தாழ்த்தப்பட்டதும் முழுப் பால மும் போக்குவரத்துக்குத் திறந்து வைக்கப்பட்டது.

(இங்கிருந்து கொளவ நிதிமந்திரி அவர்களும் உள் நாட்டு மந்திரி அவர்களும் சுளிபுரம், குருநகர், சுன்னகம், சிறுபிட்டி, அச்சுவேலி, வல்வெட்டித் துறை, அத்தியடி ஆதிய இடங்களில் சில வைபவங் களில் கலந்து கொள்ளச் செல்ல, கௌரவ போக்கு வரத்து மந்திரி அவர்கள் புங்குடுதீவு மார்க்கமாக நயினுதீவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.)

**புங்குடுதீவில்**

தீவுப்பகுதிப் பிரதிநிதி **திரு. வி. ஏ. கந்தையா** தீவுப் பகுதிக் காரியாதிகாரி **திரு. சாமுவேல் தம் பையா** ஆகியோர் சகிதம் கௌரவ போக்குவரத்து மந்திரி அவர்களின் கோஷ்டி மடத்து வெளித் துறையை அடைந்ததும் அங்கு நிறுவப்பட்ட ஓர் அழகிய பந்தரிலே புங்குடுதீவுப் பொது மக்கள் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது. புங்குடுதீவு கிழக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் 9 வேண்டு கோள்களை மந்திரிக்குச் சமர்ப்பித்தது. இதை அதன் தலைவர் **திரு. சி. சின்னத்துரை** ஆசிரியர் அவர்கள் வாசித்துக் காட்டுமுன்பு மந்திரி, அவர்களுக்கு எலு மிச்சம் பழமொன்றை "அன்புக்கனியாகக்"கொடுத்து வரவேற்றார். மந்திரி கோஷ்டியினருக்கு இத்துறை யிலே பானமும், பழமும் வழங்கினர். புங்குடு தீவைச் சேர்ந்த **புரக்டர் கதிரவேலு** அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பின் மூலம் கோரிக்கை களுக்குச் செவிமடுத்த மந்திரி அவர்கள் நன்றி யுரை தெரிவித்தபின் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் அளிக்கப் பட்ட ஒரு வரவேற்பில் பங்குப்பற்றினர்.

இதற்குத் தலைமை வகித்த புங்குடுதீவுக் கிராமச் சங்கத் தலைவரும் தலைமை ஆசிரியருமான **திரு. செல்லத்துரை** அவர்கள் மந்திரி அவர்களை வரவேற்று தண்ணீர்ப்பஞ்சம், தெருச் சீர்திருத்தம் என்பன சம்பந்தமாக புங்குடுதீவில் செய்யப்பட வேண்டிய வேலைகளை விரித்துக் கூறி சிங்கள மக்கள் நீட்டும் அன்புக்கரத்தைப் பற்றிப் பிடித்து நாட்டின் நன்மைக்காக ஒற்றுமையாக வாழவேண் டிய அவசியத்தை வலியுறுத்தினர். இப்பாடசாலை யைச் சேர்ந்த மூன்று மாணவிகள் பாடிய வர வேற்புப்பா வருமாறு :—

வருவீரே வருவீரே எங்கள் அமைச்சே—நல்
வரவாகவே இது நிலை பெறுமே—(வரு)
லங்காவின் தனியான நல் அமைச்சே
வந்திட்ட வகையினல் மகிழ்வெமக்கே
இங்குற்ற குறை நீக்கி தருகுவையே—(வரு)
போக்கு மராமத்துக்கான அமைச்சே
கலுகல்லையே இங்கு வருவீர் நீரே—(வரு)
தங்களின் வருகையால் எங்கள் நாட்டின்
நீரின் குறையும் நீள் வீதிக் குறையெல்லாம்
நீங்கியே போமென்றே இன்று மகிழ்ந்தோம் (வரு)
சாதியின பேதமின்றி நமது லங்கா
சமரஸமாய் நிலைபெறவே செய்திடுவீரே—(வரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து **கௌரவ போக்குவரத்து மந்திரி** அவர்கள் பேசுகையில் கூறியதாவது :—

" தமிழில் பேச முடியாமைக்கு வருந்துகிறேன். அடுத்த முறை இங்கு வரும்போது உங்களைப்போல் நானும் நல்ல தமிழில் பேசுவேன். மந்திரி என்ற முறையில், எந்த இடத்தின் அபிவிருத்தியைப் பொறுத்தமட்டிலும் எனது **நீதித் தராசை சமமாகப் பிடிப்பதுதான் எனது கொள்கை.** உங்கள் பகுதியின் சார்பாக, உப தபாற்கந்தோர்கள், தொலைபேசி வசதிகள், குறிகாட்டுவான் பாலம் போன்ற தேவைகளை நிறைவேற்ற உங்கள் பிரதிநிதி அவர்களும் எனது குருவுமான திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் சமர்ப்பித்திருக்கும் வேண்டுகோள்களுக்கு அனுமதி அளித்திருக்கிறேன் ".

புங்குடுதீவுக் கிராமச் சங்க உப தலைவரின் முடிவுரையோடு கூட்டம் முடிவடைந்ததும் மந்திரி அவர்கள் குறிகாட்டுவானுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

### குறிகாட்டுவானில்

வீதியின் இரு மருங்கிலும் அணிவகுத்து நின்ற பாடசாலைச் சிறுவர்கள் " **செந்தமிழ் நாடெனும் போதினிலே** " என்ற பாட்டைப் பாடிக்கொண்டிருக்கையில் மந்திரி அவர்கள் பந்தலுக்குள் பிரவேசித்தார்கள். பல பெரியார்கள் மாலையிட்டு மந்திரி அவர்களை வரவேற்ற பின்னர் சற்றுத் தூரத்தே கடற்கரையோரமாக அமைக்கப்பட்ட விசேட பந்தலுக்கு அவரை அழைத்துச் சென்றனர். அங்கே பலதீவு மக்களும் பிரசன்னமாயிருந்தனர். நயினாதீவு நாகவிகாரையைச் சேர்ந்த **பௌத்த பிக்கு** ஒருவரும் அங்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

புங்குடுதீவுக் கிராமச் சங்கத் தலைவர் **திரு. செல்வத்துரை** அவர்கள் மந்திரியை வரவேற்றுப் பேசுகையில், 1930 ம் ஆண்டில் இலங்கைக்குப் பொறுப்பாக இருந்த தேசாதிபதி அதி உத்தம ஹேர்பட் ஸ்ரான்லி அவர்கள் உத்தியோக பூர்வமாக விஜயஞ் செய்தபொழுது முதன்முதலாக குறிகாட்டுவானில் தான் வந்திறங்கினாரென்று கூறியதுடன் சிங்களவருக்கும் தமிழருக்கும் முக்கியமான ஓர் திருத்தலமாகிய நயினாதீவுக்கு குறிகாட்டுவான் ஓர் வசாலைப் போல் அமைந்து விட்டதைச் சுட்டிக் காட்டினார். அதுமாத்திரமன்றி நெடுந்தீவு மக்களுக்கும் மிக வசதியாக அண்மையில் அமைந்திருக்கும் குறிகாட்டுவானில், பாலமொன்று அவசியம் நிறுவப்படவேண்டுமென்று அவர் மேலும் சொன்னார். பின்னர் புங்குடுதீவு குறிகாட்டுவான் கிராம முன்னேற்றச் சங்கத்தின் பேரால் **திரு. ஆ. முத்துக்குமாரு** அவர்களால் ஓர் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

பௌத்த குரு அவர்கள் சிங்களத்தில் பேசிய பின்னர் குறிகாட்டுவான் கி. மு. சங்க அங்கத்தவரும் ஆசிரியருமான **திரு. தா. மோதரம்** அவர்கள் சில தேவைகள் பற்றிய ஓர் அறிக்கையை மந்திரிக்கு வாசித்தளித்தார். அடுத்து நெடுந்தீவு கிராமச் சங்கத் தலைவர் **திரு. ம. கணபதிப்பிள்ளை** அவர்கள் பேசிய பின்னர் அவ்வூர் கிராமச் சங்கத்தின் சார்பில் ஆசிரியர் **திரு. இ. சின்னத்தம்பி** அவர்கள் ஓர் அறிக்கையை வாசித்தளித்தார். நெடுந்தீவுப் பொருளாதார முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் அதன் காரியதரிசி **செல்வன். தனிநாயகம்** அவர்கள் நெடுந்தீவுப் பொருளாதார முன்னேற்றத்துக்கு அவசியமாக வேண்டப்படும் சில சேவைகளையிட்ட ஓர் விண்ணப்பத்தை வாசித்து மந்திரியிடம் சமர்ப்பித்தார்.

**திரு. வி. ஏ. கந்தையா** அவர்கள் பேசுகையில் குறிகாட்டுவோன் பாலத்தின் அவசியத்தையும் இதர சேவைகளையுமிட்டு மந்திரி அவர்களுக்கு ஏற்கெனவே அறிவித்துவிட்டதாயும் இவற்றுக்கு முதலிடமளிக்க அவர் ஒப்புக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மந்திரி அவர்கள் பதிலளிக்கையில், தமிழர்களும் சிங்களவர்களும் ஒரே தாயின் பிள்ளைகளென்றும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம் தமிழ் பாஷைக்கும், கலாசாரத்துக்கும் உரிய இடமளிக்குமென்றும் கூறி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இங்கிருந்து " கமலாதேவி " என்ற மோட்டார் படகின்மூலம் மந்திரி கோஷ்டியினர் நயினாதீவுக்குப் பயணமாகினர்.

### நயினாதீவில்

கிராமச் சங்கத் தலைவர் **திரு. ரி. கிருஷ்ணசாமி** அவர்கள் உட்பட பல பெரியார்கள் மந்திரி அவர்களை வரவேற்று நாகபூஷணி அம்பாள் கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு நிறைவேற்றப்பட்ட ஒரு விசேட பூசையின் பின்னர் நயினாதீவில் சேவை செய்யும் ஒரேயொரு பஸ்வண்டியில் மந்திரி அவர்களும் ஏனைய பிரமுகர்களும் ஏறி நாகவிகாரையை அடைந்தனர். மந்திரி அவர்கள் அங்கு மலர் சாத்தி வணக்கஞ் செலுத்திய பின்னர் விகாரையையும், கட்டடங்களையும் பார்வையிட்டார். ஈற்றில் நயினாதீவு வாடிவீட்டில் மந்திரி கோஷ்டியினருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிய போசனமளிக்கப்பட்டது. தீவுப் பகுதி உடையார் **திரு. முருகேசு** அவர்களும் நயினாதீவு கிராமத் தலைமைக்காரர் **திரு. சிவசிதம்பரம்** அவர்களும் இந்த விருந்துபசாரணையை வெகு சிறப்பாக முன்னின்று நடாத்தி தீவுமக்கள் விருந்தோம்பலில் சற்றும் சளைக் காதவர்களென நிலவும் அபிப்பிராயத்தை நிலை நாட்டினர்.

மந்திரி அவர்கள் கை துடைப்பதற்காக தனது சால்வையைக் கொடுத்துதவிய திரு. வி. ஏ. கந்தையா அவர்கள், இப்படிப்பட்ட தேவைகளுக் காகத்தான் தமிழர் சால்வை அணியும் வழக்கத் தைப் பின்பற்றி வருகிறார்களென்பது மந்திரியவர் களுக்குச் சுருங்கக்கூறி விளங்கவைத்ததை இரண் டொருவர்தான் கவனித்திருக்க முடியும்.



தீவுப்பகுதிப் பிரதிநிதி திரு. வீ. ஏ. கந்தையா அவர்கள் போக்குவரத்து மந்திரிக்கு ஊர்காவற்றுறை “ ஹம்மன்ஹீல் ” கடற்கோட்டையைக் காண்பித்து அதன் சரித்திர முக்கியத்துவங்களை விளக்குகிறார். கழுத்துப் பட்டியுடன் (ரை) இடது கோடியில் காணப்படுபவர் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. சாமுவேல் தம்பையா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........



**ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையில்**

நயினாதீவிலிருந்து புறப்பட்ட மந்திரி கோஷ்டி மாலை 5.30 மணியளவில் ஊர்காவற்றுறைக் கடற் கோட்டைக்கு விஜயஞ் செய்தது. கடற்கோட்டையுள் உள்ள ஒரு மண்டபத்திலே அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி உத்தியோகத்தர்கள் மந்திரிக்கு ஓர் தேநீர் விருந்தளித்தனர்.

**காரைநகரில்**

மாலை 6.30 மணியளவில் மந்திரி அவர்கள் காரைநகர் துறைமுகத்தை அடைந்தார். கிராமச் சங்கத் தலைவர் **திரு. எம். வேலுப்பிள்ளை** அவர்கள் காரைநகர் மக்கள் சார்பில் மந்திரியை வரவேற்று ஓர் வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தார். துறைமுகம், தாம்போதிச் சேவை, தெருக்கள், மின் சார வசதி ஆகியவற்றின் விஷயத்தில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி அப்பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தது. மேலும் பலர் பேசிய பின் மந்திரி அவர்கள் யாழ்ப்பாணஞ் சென்று ஏனைய மந்திரிகளுடன் அர்ச்.பரியோவான் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் அளித்த ஓர் இராப்போசன விருந் தில் கலந்து கொண்டார். **(இதன் விவரத்தைப் பிறிதோர் இடத்தில் காண்க).**

**மூன்றும் நாள்**

காலை 7.45 மணியளவில் மூன்று மந்திரிகளும் யாழ்ப்பாணப் பிரதிநிதி **திரு. அல்பிரெட் துரை யப்பா** அவர்களுடன் யாழ்ப்பாணப் புகையிரத நிலை யச் சந்தியை அடைந்தார்கள். இந்தச் சந்தியிலிரு ந்து புகையிரத நிலைய வாசல் வரையுள்ள இடம் மகர தோரணங்களால் வெகு சிறப்பாக அலங் கரிக்கப்பட்டிருந்தது. பலத்துப் பெய்த மழையையும் பொருட்படுத்தாதுபெருந் திரளான மக்கள் வீதியின் இருமருங்கிலும், புகையிரத மைதானத்திலும் கூடி நின்றனர். இந்த மந்திரிகளின் விஜயத்தின்போது இவ்வைபவத்துக்குத் தான் அதிகமான மக்கள் சமுகமளித்தனர் எனலாம்.

புகையிரத நிலைய முன்றலில்அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு மந்திரிகள் வந்ததும் அவர்களை வரவேற் றுப் பேசிய புகையிரதப் பகுதித் தலைமை அதிபதி **திரு. பி. டி. ரம்பாலா** அவர்கள் கூறியதாவது :—

" அரசாங்கம் ஆறு புகையிரத நிலையங்களைச் சீர் திருத்தி அமைக்க முடிவு செய்துள்ளது. இதில் யாழ்ப்பாணப் புகையிரத நிலையமும் ஒன்றாகும், இதற்கு வேண்டிய பணம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒதுக்கப்பட்டதெனினும் இடவசதி போதாத காரணத்தால் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. இந் தச் சுற்றுடலில் உள்ள நிலச் சொந்தக்காரர்கள் எதுவித ஆட்சேபனையுமின்றித் தமது நிலத்தை எமக்கு ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்த 5 வருடங்களுள் இந்த நிலையம் பூரண மாகக் கட்டி முடிக்கப்படும். அப்போது இதைவிடச் சிறந்த ஓர் வைபவம் இங்கு நிகழும். புதிய புகை யிரத நிலையம் 3 மேடைகளையும், பெருந்தொகை யான உணவுச் சாலைகள், தங்கும் அறைகள், மல சல கூடங்கள், மேல் மாடிகள், நிலவறைப் பண்ட சாலைகள் முதலியவற்றையும் கொண்டிருக்கும்.

இந்த நிலையத்துக்கு அத்திவாரக் கல் நடும்படி கௌரவ போக்குவரத்து அமைச்சரை பொதுமக்கள் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன். "

குறிக்கப்பட்ட நேரத்தில் அத்திவாரக்கல்லை நாட்டி மேடைக்குத் திரும்பிய போக்குவரத்து மந்திரி **திரு கலுகல்ல** அவர்கள் பேசியதாவது :—

" தமிழர்களாகிய உங்கள் கலாச்சாரத்தின் படி இந்நிலையத்துக்கு அத்திவாரக்கல் நாட்டியுள்ளேன். சிங்களம் தான் அரசாங்க மொழியாக இருந்தாலும், தமிழரின் கலாச்சாரத்தை அழிக்க நாம் ஒரு நட வடிக்கையும் எடுக்கவில்லை என்பதை இங்கு குறிப் பிட விரும்புகிறேன். யாழ்ப்பாணத்தில் நாம் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் மிகவும் அன் பாக எங்களை வரவேற்றனர். அவர்கள் பாஷைப் பிரச்னையைப் பற்றிப் பேசவில்லை. தமது தேவை களையே கூறினார்கள். தமிழரசுக் கட்சி அங்கத்தவர் கூட ஸ்ரீமாவோ அரசாங்கம் தமிழருக்கு நல்ல தென்று ஏற்றுக் கொண்டார்கள். ஸ்ரீமாவோ அர சாங்கம் உங்களைக் கஷ்டப்பட விடாது. உங்களை எமது இளைய சகோதரர்களென்று நாம் நம்புகிறோம். இத ற்கு உங்களின் ஒத்துழைப்பு அவசியம். திரு. அல் பிரெட் துரையப்பா அவர்கள் உங்கள் பிரதிநிதி யாக இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். **திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்கள் போக்கு வரத்துவரத்து மந்திரியாக இருந்தபோது இந்த நிலையத்துக்காக 18 லட்சம் ரூபாவை ஒதுக்கி வைத் திருக்கிறார். சீக்கிரத்தில் குளிரூட்டப்பட்ட பிரயாணப் பெட்டியொன்றை உங்கள் பிரயாண சேவைக்கு விடு தற்குத் தீர்மானித்திருக்கிறோம். அதில் உங்கள் பிரதிநிதிகள் மிகவும் சௌகரியமாக வந்திறங்கி எங்களுடன் ஒத்துழைப்பார்களென நம்புகிறோம்.

கடைசியாக இரு சமூகத்தினருக்கும் உள்ள ஒற் றுமை நாளுக்கு நாள் ஓங்கி வளர வேண்டுமெனப் பிரார்த்தித்து எனது பேச்சை முடிக்கின்றேன். "

தொடர்ந்து **திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்கள் தமிழில் பேசியதாவது :—

" 33 வருடங்களுக்கு முன் ஒரு சாதாரண இளை ஞனாக இந்த ஸ்ரேஷனுக்கு வந்த நான் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஸ்ரேஷன் கட்டுவதற்குரிய இந்த ஆரம்ப விழாவில் ஓர் மந்திரியாகப் பங்குபற்றச் சந்தர்ப்பங் கிடைத்ததை யிட்டு சந்தோஷப்படுகிறேன். கடந்த 2 நாட்களையும் நாம் யாழ்ப்பாண மக்களுடன் மிகவும் சந்தோஷ மாகக் கழித்தோம். எனக்கு யாழ்ப்பாண மக்களை நன்ருகத் தெரியும். நான் போக்குவரத்து மந்திரி யாக இருந்தபோது இந்த ஸ்ரேஷன் கட்டுவதற்காக சிறிய உதவியையேனும் செய்ய முடிந்ததைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன். எங்களுக்கிடையில் வித்தியாசங் கள் இருந்தாலும் அவற்றை மறந்து நாங்கள் சகோதரர்களாக வாழவேண்டுமென்றுவிரும்புகிறேன் நாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆதலால், தகராறுகளை மறப்பது நமக்குச் சாத்தியமாகும். நம் நாடு முன்னேறுவதற்கு நாம் சமாதானமாக வாழவேண்டுமெனக் கேட்டுக் கொண்டு எனது பேச்சை முடிக்கிறேன்."

பின்பு நிதி மந்திரி **திரு. டயஸ் பண்டார நாயக்கா** அவர்கள் தமிழில் ஒரு சில வார்த்தை களைப் பேச ஆரம்பித்தார். "**கௌரவ அங்கத்தவர் களே, கௌரவ சுப்பிறீங் கோட்டு ராசா அவர்களே, சகோதரர்களே, வணக்கம்**" என்ற வார்த்தைகளை மட்டும் அவர் தமிழில் பேசிஞர். இதைக்கேட்ட மக்கள் கூட்டம் மிக மகிழ்ச்சியுடன் கரகோஷஞ் செய்தது.

நிதிமந்திரி அவர்கள் மேலும் பேசுகையில் கூறிய தாவது :—

"யாழ்ப்பாணத்தில் தங்கிய இரண்டு நாட்களிலும் இதிலும் அதிகமான தமிழைக் கற்க முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் புதிய புகையிரத நிலையக்கட்டடத்தைக் கட்டுவதற்கான அத்திவாரக்கல் கௌரவ போக்குவரத்து மந்திரி கலுகல்ல அவர்களால் நாட்டப்பட்டது. புகையிரதப் பகுதித் தலைவர் திரு. ரம்பால அவர்களும் படத்தில் காணப்படுகிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த முறை வரும்போது நான் எனது பேச்சைத் தமிழில் நிகழ்த்துவேன்.

எந்த நிதி மந்திரியும் பணத்தைச் செலவிடுமுன் சற்று யோசிப்பது வழக்கம். ஆனால் 18 லட்சம் ரூபாவை இந்த நிலயத்துக்குச் செலவழிப்பதை யிட்டு நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். தமிழருக்கும் சிங்களவர்களுக்குமிடையில் அந்நி யோன்யம் ஏற்பட வேண்டுமென்றால் இப்படியான போக்கு வரத்து வசதிகள் அவசியம். மக்களுக் கிடையில் அன்பை ஏற்படுத்தப் பல சாதனங்கள் உண்டு. அதில் இதுவுமொன்று. இதர சாதனங் களும் உண்டு. அவற்றில் முக்கியமானது பாஷை. நான் நிதி மந்திரியாக அதிகநாள் இருக்க வேண்டு மானால் தமிழையும் சிங்களத்தையும் கற்க வேண்டி யிருக்கிறது.

யாழ்ப்பாணப் புகையிரத நிலயம் தான் பொரு ளாதார அபிவிருத்திக்கு நல்ல வருமானம் கொடுக்குமென்று திரு. டம்பால சொன்னர். **எங்க ளுக்கு இலாபம் பெரிதல்ல; தொண்டுதான் பெரிது.** போக்குவரத்து வசதி அதிகமானல் நீங்கள் தென் னிலங்கைக்கு அதிகமாக வந்து எங்களுடன் கலந்து எமக்கிடையில் உள்ள பிரச்னைகளைத் தீர்த்துக்கொள் ளலாம்.

சில சிங்கள மக்கள் உங்களைப்பற்றித் தப்பபிப்பி ராயம் கொண்டிருக்கிருர்கள். இங்குள்ள பனை களில் கள்ளுமட்டுமல்ல, கறுப்புக் கொடிகளும் பறக்கு மென்று நினைக்கிருர்கள். இது தவறென் பதை நான் அவர்களுக்குத் தெரிவிப்பேன். தமிழ ருக்கும் சிங்கள மக்களைப்பற்றிப் பிழையான எண் ணம் இருக்கிறது. அதாவது டிசம்பர் மாதம் 31 ந் திகதி எல்லோரையும் நீக்குவோமென்றும் அவர்கள் நாக்கை அறுப் போமென்றும் பயந்திருக்கிருர்கள். தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களை கேட்பது ஒன்று தான். அதென்னவானால் **சிங்கள பாஷையை எழுத வாசிக்க அறிந்து கொள்ள அவர்கள் எத் தனிக்க வேண்டும். மந்திரிகளாகிய நாங்கள் கூட இதைச் செய்ய வேண்டியிருக்கிறது.**

பள்ளிக்கூடத்தை எடுக்கும் பிரச்னையில் பல ருக்குப் பல விசித்திரமான எண்ணங்கள் ஏற்பட் டுள்ளன. இவை எல்லாம் பத்திரிகைகளை நம்புவ தால் ஏற்படுவனவாகும். சுதந்திரக் கட்சி, அபிவிருத் திக்கான ஆக்க வேலைகளைச் செய்வதையே விரும்பு கிறது. எங்கள் யாழ்ப்பாண விஜயத்தின்மூலம், ஸ்ரேஷனுக்குக் கல் நாட்டியதைப் போல சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்குமிடையில் **அந்நி யோன்யம் ஏற்படவும் அத்திவாரக்கல் நாட்டியிருக் கிறோம்.**

கடந்த நான்கு வருடங்களாக எந்த மந்திரியும் இங்கு வரவில்லை. தமிழ் பிரமுகர்களும் பல வரு டங்கள் எம் மத்தியில் வரவில்லை. திரு. அல்பிரட் துரையப்பா அவர்கள் இந்தக் குறையை நிவிர்த்திக்க ஒப்புக் கொண்டிருக்கிருர். திரு. வி. ஏ. கந்தையா அவர்களும் இதற்குச் சம்மதித்திருக்கிருர் ".

யாழ்ப்பாணப் பிரதிநிதி **திரு. அல்பிரட் துரை யப்பா** அவர்கள் பேசுகையில் சிங்கள, தமிழ் மக் களின் ஒற்றுமையை வலியுறுத்தி அதற்காகத் தான் பாடுபட விருப்பதாகக் கூறி மந்திரிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பின்னர் கச்சேரியில் நடைபெற்ற சில மகாநாடு களில் பங்குபற்றிய **நிதி மந்திரியும், போக்குவரத்து மந்திரியும் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றனர்.**

உள் நாட்டலுவல் மந்திரி **திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா** அரியாலை உப்பளம், கைதடி வயோதி பர் இல்லம், கொடிகாமம் கிராமாபிவிருத்திச் சங்கம் என்பவற்றுக்குச் சமுகமளித்து அங்கு நடைபெற்ற வைபவங்களில் பங்குபற்றினர்.

மத்தியானம் 12 மணியளவில் பரந்தன் இரசாய னத் தொழிற்சாலைக்கு உள்நாட்டலுவல்கள் மந்திரி விஜயஞ் செய்தார். தொழிற்சாலை வாசலில் கிளிநொச்சிப் பிரதிநிதி **திரு. சிவசுந்தரம்,** தொழிற் சாலைத் தலைவர் **டாக்டர் சண்முகம்,** உப்புப்பகுதித் தலைவர் **திரு. திசைவீரசிங்கம்,** பனைக் காரியாதி காரி **திரு. முருகேசம்பிள்ளை,** தொழிற்சாலைச் சபை யின் உப அதிபர்கள், பொறியியல் நிபுணர்கள் ஆதியோர் மந்திரியை வரவேற்றனர். தொழிற்சா லையின் பல்வேறு பகுதிகளையும் காரச்சோடா, குளோ றின் என்பன தயாரிக்கப்படும் முறைகளையும் பார் வையிட்ட பின்னர் தொழிலாளர் சங்கத்தலைவர் **திரு. இராமநாதன்** அவர்கள் தலைமையில் நடை பெற்ற ஒரு கூட்டத்தில் தொழிலாளர்களின் நிலை மையை திரு. இராமநாதன் அவர்கள் விளக்கிக் கூறினர். மந்திரி அவர்கள் பதிலளிக்கையில், இந் தத் தொழிற்சாலைக்குச் செலவிடப்பட்டிருக்கும் பணத்தைக் கணக்கிடும் போது **இதன் தற்போ தைய வருவாய் அதன் முதலீட்டுக்கான வட்டிக்கே போதியதாக இல்லையென்றும்,** தற்போது இதைப் பரிபாலிக்க நியமிக்கப்பட்டுள்ள சபையின் அறிக்கை யும் ஆலோசனைகளும் தயாராகும் வரை தொழி லாளர்கள் சுமுகமாகக் கடமையாற்ற வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார். **திரு. சிவசுந்தரம்** அவர்களும் மந்திரியின் கருத்தை ஆமோதித்துப் பேசி சில காலம் அவர்கள் பொறுத்திருப்பது நல்ல தெனக் கூறினர். பின்னர் விருந்தினர் மண்ட பத்தில் மந்திரி கோஷ்டியினருக்கு மதிய போசன மளிக்கப்பட்டது.

(30 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பரியோவான் கல்லூரிப் பழைய மாணவர் சங்க வருடாந்த விருந்து வைபவத்துக்கு யாழ்ப்பாணப் பிரமுகர்களுடன் மூன்று மந்திரிகளும் சமுகமளித்திருந்தார்கள். பிரதம அதிதியாக கௌரவ நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அவர்கள் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணப் பரியோவான் கல்லூரி

# பழைய மாணவர் சங்க விருந்தில் மூன்று மந்திரிகள்

வட மாகாணத்திலுள்ள பிரபல பாடசாலைகளுள் ஒன்ருன யாழ்ப்பாண பரியோவான் கல்லூரிப் பழைய மாணவர் சங்க வருடாந்த விருந்தில் மூன்று மந்திரிகளும் பங்குபற்றியமை அவர்களது வட மாகாணச் சுற்றுப் பிரயாணத்தின்போது நிகழ்ந்த முக்கிய சம்பவங்களில் ஒன்ருகும்.

**கௌரவ திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா,** ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் பாராளு மன்றக் காரியதரிசியாக இருந்த திரு. வலகெதரை என்போர் இக்கல்லூரியின் பழைய மாணவர்களிற் சிலராவர்.

கடந்த கால் நூற்ருண்டு காலத்தில் யாழ்ப்பாணத்தில் தான் கண்ட மிகப் பெரிய விருந்து வைபவம் இதுவே என்று 25 வருடங்களாகச் சேவை செய்துவரும் ஒரு பத்திரிகையாளர் வர்ணித்தார். ஒவ்வொரு அம்சங்களேயும் மிக நுணுக்கமாகக் கவனித்து அமுல் நடாத்துவதற்குச் சகல முயற்சிகளும் செய்யப்பட்டன. ரோயல் இலங்கைக் கடற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையின் பான்ட் வாத்தியக் கோஷ்டி விருந்து நேரம் முழுவதும் இன்னிசை எழுப்பியவண்ண மிருந்தது. பொதுவாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சகல பிரமுகர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். 310 பேருக்கு இடவசதியளிக்கப்பட்ட இவ்விருந்து வைபவத்துக்கு பழைய மாணவர் சங்கத்தலைவர் **டாக்டர் ஏ. வி. ஏ. வேதநாயகம்** அவர்கள் தலைமை வகித்தார். கல்லூரி மண்டபமும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் விருந்தினரை உப சரிக்க முற்றுகப் பயன்படுத்தப்பட்டன.

**இவ்வருடாந்த விருந்துபசாரத்தின்—**

**பிரதம அதிதிகள் :**

**கௌரவ திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டார நாயக்கா** அவர்களும், திருமதி பண்டாரநாயக்கா அவர்களும்.

**இதர பிரமுகர்கள் :**

(1) **கௌரவ திரு. மைத்திரிபால சேனநாயக்கா** (இக்கல்லூரியின் பழைய மாணவர்).

(2) **கௌரவ திரு. கலுகல்ல,**

(3) **செனற்றர் அசீஸ்.**

தலைவர் டாக்டர் ஏ. வீ. ஏ. வேதநாயகம் அவர்கள் பிரதம அதிதியான **கௌரவ திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா** அவர்களை வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது :—

" எந்த நிலைமையையும் எதிர்நோக்கும்போது நீங்கள் கடைப்பிடிக்கும் நேர்வழியையும், உறுதியான மனப்பான்மையையும், தைரியத்தையும் நாங்கள் மெச்சுவதுடன் மக்களுக்குச் சேவை செய்வதற்கு எப்போதுந் தயாராக இருக்கும் உங்கள் அருங் குணத்தையும் நாம் பாராட்டுகிறோம்.

நாட்டை ஒன்றுபடுத்துவதற்கும், இந்த நாட்டு மக்கள் யாவரும் ஒரே மக்கள் என்ற உணர்ச்சியுடன் வாழும் நிலைமையை ஏற்படுத்துவதற்குமாக தேவன் உங்களுக்கு அருளியுள்ள தலைமைப் பதவிக்குரிய இந்தத் திறமைகளை நன்கு உபயோகிக்கும் வல்லமையையும் அவர் உங்களுக்கு அளிப்பாராக ".

**கௌரவ மைத்திரிபாலா** அவர்களுக்குக் கூறியதாவது :—

" உங்கள் வீட்டுக்கு உங்களை வரவேற்பதாகவே நாம் உணருகிறோம். உங்கள் நண்பர்களும், சக மாணவர்களுமாகிய நாங்கள் உங்களின் முன்னேற்றத்துக்கு எல்லாம் வல்ல இறைவன் சகல சந்தர்ப்பங்களையும் அளித்து உங்களை ஆசிர்வதிக்க வேண்டுமென விரும்புகிறோம் ".

**கௌரவ திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா** அவர்கள் பதிலளிக்கையில் கூறியதாவது :—

" இந்நாட்டின் இந்தப் பகுதிக்கு கடந்த நான்கு வருடங்களாக எந்த மந்திரியும் வரவில்லை. இது மிகவும் பரிதாபகரமான ஓர் சம்பவமாகும். இதைப் போன்று தமிழ் மக்களால் தெரியப்பட்ட தலைவர்களும் எம் பகுதிகளில் வரவேற்கப்படவில்லை. நான் பிரதிநிதித்துவம் வகிக்கும் தொம்பே தேர்தல் தொகுதிக்கு வந்து எனது மக்கள் எத்தகையவர்கள் என்று அறியும்படி தமிழ்ப்பிரதிநிதிகளை அழைக்கிறேன். இப்படிச் செய்வதால் சமூக வேற்றுமைக்கான நிலைமைகள் பூண்டோடு ஒழிந்துவிடும். சமூக ஒற்றுமை இந்நாட்டின் முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியமான தென்பதை இங்கு வலியுறுத்த விரும்கிறேன்.

நாட்டின் வாழ்வைச் சிறப்பித்தற்கும் **மைத்திரி பாலா சேனநாயக்கா** போன்ற பழைய மாணவர்களை உருவாக்குவதற்கும் நூற்றுண்டுக் கணக்கில் அயராது சேவைசெய்த கல்வித்தாபனங்களை ஒழிப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல ".


**கௌரவ மைத்திரிபால சேனநாயக்கா** அவர்கள் கூறியதாவது :—

" இருபெரும் சமூகத்தினரான சிங்களவரும் தமிழர்களும் அவர்களது பொதுத் தாய் நாடு முன்னேறவேண்டுமானுல், ஒற்றுமையாக வாழவேண்டியது அவசியம் என்பது எனது திடமான நம்பிக்கை. யாழ்ப்பாணத்தில் நான் ஏழு வருடங்கள் வசித்தேன். இதுவே எனது இரண்டாவது வீடாகும். நான் இங்கு படித்த ஏழு வருடங்களிலும் தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களுக்குமிடையில் எதுவித வித்தியாசமும் இருக்கவில்லை.

இவ்விதமான தொடர்பை நிலைநாட்ட வேண்டுமென்பதையே நான் சகல மக்களையும் கேட்டுக் கொள்கிறேன். இன்று நான் இருக்கும் நிலைமைக்கு பரியோவான் கல்லூரியும் அங்கு நான் பெற்ற கல்வியுமே காரணமாகும்.

ஒழுக்கத்தின் மேன்மையையும், நாட்டுக்கும் மக்களுக்கும் சேவைசெய்ய வேண்டியதன் அவசியத்தையும் நான் இங்குதான் கற்றேன். தேசீய சகோதரத்துவத்தின் அத்தியாவசியத்தையும் இக்கல்லூரி தான் என் மனதில் பதியவைத்தது ".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதமணி திரு. கணபதிப்பிள்ளை அவர்கள், கணேசையர் நினைவுமலர் வெளியீட்டு விழாவில் சொற்பொழிவாற்றுகிறார். இலங்கைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் ஐயரின் மாணவருமான திரு. வி. செல்வநாயகம், சேர். கந்தையா வைத்தியநாதன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. டி. நாராயணசாமிப்பிள்ளை, கணேசையர் நினைவு மலர் வெளியீட்டாசிரியர் கலைப்புலவர் திரு. க. நவரத்தினம், முன்னாள் தபால் தந்தி அமைச்சரும் சைவப் பெரியாருமாகிய திரு. சு. நடேசபிள்ளை, திரு. ச. அம்பிகைபாகன் ஆதியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

# மகா மகோபாத்தியாய கணேசையர்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

கடந்த ஒக்ரோபர் மாதம் எட்டாந் திகதி மாலை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கணேசையர் நினைவு மலர் வெளியீட்டு விழா அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. டீ. எம். நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றபொழுது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் :

**தமிழ் செய்தல்**

“ என்னை நன்றாக
இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத்
தமிழ் செய்யுமாறே ”

என்பது **திருமூலர் திருமந்திரம்.**

இவ்வாக்கில் “ தமிழ் செய்தல் ” என்ற தொடர் சிந்தனைக்குரியது.

சிந்தனைகள் சமுத்திர அலைகள். அந்த அலைகளுக்குள்ளே எந்தச் சிந்தனை நிலைத்தற்குரியதோ– சத்தியமானதோ– அந்தச் சிந்தனையைக் கண்டு பிடித்து, அதில் அன்பு செய்தல் வேண்டும். அப்படி அன்பு செய்தலுக்குத்தான் “ தமிழ் செய்தல் ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெயர். தமிழ் என்றால் அன்பு என்று பொருள்.

தமிழ் செய்தல் ஒரு சாதகம் அன்புச் சாதகம். சங்கத்துச் சான்றோர்கள் இந்தத் தமிழ் செய்த லாகிய அன்புச் சாதகத்தைச் செய்தவர்கள்.

அவர்கள் சிந்தனை அலைகளுக்குள்ளே மூலமான சத்திய சிந்தனைகளை, அகம் புறம் என இரண்டாக வகுத்து ஆராய்ந்திருக்கிறார்கள். அகம் என்றால் இருமையை ஒருமை செய்யும் அன்பு; சிந்திப் போனையும் சிந்தனையையும் அந்நயம் செய்யும் அன்பு நிலை, புறம் அதற்கு உபகாரமான நிலை.

**உரியே தமிழின் உயிர்**

இந்த அகமாகிய அன்பு நிலையை ஏழு திணைக ளாகக் கிரமஞ்செய்திருக்கிறார்கள். ஏழு திணையை யும் களவு நிலை கற்புநிலை என இரண்டாக வகுக்க வும்படும். கண்ணப்பரின் அன்பு நிலை கற்புநிலை. காளத்தியப்பருக்கு வேறாக கண்ணப்பருக்கு என்று ஒரு கண்ணில்லாத அன்பு நிலை கண்ணப்பரின் கற்புநிலை; களவு நிலையின் முதிர்புதான் கற்புநிலை.

இந்தக் களவுநிலை கற்புநிலையாகிய அன்பின் உச்சநிலைக்குத் தொல்காப்பியம் ஒரு சிறு சொல் வழங்குகின்றது. அது "உரி" என்பது. உறுதி எய்துதற்குரிய மக்கள் இறுகப்பற்றிக் கொள்ளுதற் குரியபொருள் உரி.

**உரிதான் தமிழின் உயிர்,** உயிரில்லையேல் உடம்பு பிணமாகும். அவ்வாறே யாதொரு செய்யுளோ நூலோ உரி என்ற உயிரில்லையேல் அது எத்தனை தோற்றமுடையதாயினும் அது தமிழ் ஆகாது. தொல்காப்பியம் பொருளதிகாரம் இந்த உரிப் பொருளை ஆராய்ந்திருக்கின்றது.

நாம், தமிழ் இன்னது என்று அறியவிரும்பினால் தொல் பொருள் ஆராய்ச்சி நமக்கு இன்றியமை யாதது. சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள், நிலத்தைக் கிண்டியும் சமுத்திர ஆழத்துள் சென்றும் தொல் பொருள் ஆராய்ச்சி செய்கின்றார்கள்.

**உரிப்பொருள் ஆராய்ச்சி**


அவ்வாறே நாமும் "தொல்" என்கின்ற தொல் காப்பியத்துள் புகுந்து, பொருளதிகாரத்தை ஆராய்ந்து தமிழின் உயிரான உரியைக் காண வேண்டும். இந்த உரிப் பொருளாராய்ச்சி மிக முன்னமே குன்றிவிட்டது எனினும் ஆராய்வதற்கு உபகாரங்கள் உண்டு. களவியலும் உரையும் அதற் குபகாரங்கள். உரைகளும் உபகாரங்கள். சில சமயங் களிலே தொல்பொருள்களை மண்கள் கற்கள் மூடு வதுபோல உபகார உரைகள் மூடிவிடுவதுமுண்டு. எனினும் அவைகளின் உதவிகள் ஒரு அளவுக்கு வேண்டியவைகளே.

**மகாமகோபாத்தியாயர் கணேசையர்**

உபநிடத வாக்குகளை பிரமசூத்திரங்களை உரை களுக்கு வேறாகவும் எவ்வாறு சிந்திக்கவேண்டுமோ, அவ்வாறே தொல்பொருட் சூத்திரங்கள் சிந்திக்க வேண்டியவைகள்.

அந்தச் சிந்தனைக்கு உறுதுணை செய்யக் காலங் தோறும் எழுந்த உரைகள் வெகு கடினமானவை கள். அந்த உரைகளை எளிதில் விளங்குதற்குக் கணேசையாவின் உரை விளக்கக் குறிப்புகள், உரை விளக்கக் குறிப்புகள், பெருந்துணை புரிபவைகள்.

(31 ம் பக்கம் பார்க்க)



மகாமகோபாத்தியாய பிரம ஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் ஒளி

(நவாலியூர் சோ. நடராசன்)

கேட்டது தமருகம் கிளர்ந்தது பேரிருள்
நாட்டிய நாயகன் சிறு விரல் நகர்ந்தது
சித்திரத் தெழுதிச் சத்துவ மூட்டிய
உத்தம நங்கை கூறும் " ஐயனே,
ஆடல் நயந்தனைபோலு " மென், றண்டம்
மூடிய பேரிருள் முற்று மிருண்டது
வெடித்தது புகைத்திரை யிடித்தது விண்ணகம்
எட்டுத் திசைகளும் கட்டிக் காரிருள்
ஓமென்றிரைந்ததப் பேரிருளிடையொலி
பிறந்தது மற்றோர் பெருயுகம் ; காலப்
பெருங்கடல் வெள்ளம் பெற்றதோர்திவலை !
இருள் ! இருள் ! இருளாம் ! எங்கணும் பேரிருள் !
*ஆதியிலிஃதிருள் மயமாயிருந்தது
ஆதியிலிஃதிருள் மயமாய்ச் செய்த
வேதியன் வாழ்கவிப் பேரிருள் வாழ்க !

* மனுஸ் மிருதி.

வேறு

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிக்
கல்லா மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தோ மெம்பெருமான்
வாழ்க விருளிந்த வையத் தொளிகாட்டிச்
சூழ்க வருளெங்குஞ் சுருதிச் சுடரேற்றி

வேறு

காலே கையாகக் கனிபறித்து வாழ்ந்த தெல்லாம்
நாலேநால் நாட் பின்னர் ஞானம் பலவடைந்தோம்
வானத்தினுச்சியிலே வட்ட மிடும்பருந்து
ஊனத்து மானிடத்தி னூன்வேட்டை யாடி வந்தோம்

போக்கும் வரவும் புணர்வும் புதிதாக
வாக்குஞ் செயலும் வகுத்து வகுத்தனந்தம்
நோக்கங்கள் கொண்டிருளை யோட்ட முயன் றெய்த்தோம்

நோக்கங்களுஞ் செயலும் நுவன்ற பெருவாக்கும்
ஆக்கமின்றி யோயாத சஞ்சலத்தி லாழ்த்திவிட்ட
நில்லா தசைவதற்கு நீளறிவு பெற்று விட்டோம்
நில்லா தசைவதல்லால் நிற்கநெறி காணோமே
பேசப் பழகிப் பெரும் பேச்சுப் பேசுகிறோம்
பேசாப் பெரும் பேச்சைப் பேசுதற்கு யாமறியோம்
சொல்லையறிந்தோம் பின் சொற்பொருளைத் தாமறிந்தோம்
சொல்லின் பொருளறியச் சொற்பமுநா மறியோமே
ஆண்டு பலநூ றருளாமற் போய்க் கழிந்த
பூண்ட விருட்பொலிவிற் பூதிபெறப் பாடுகிறோம்.

வேறு

நீறுதாங்கிய நெற்றியர் ஒருபால்
சேறுதாங்கிய சிந்தையர் ஒருபால்
அறிவுதாங்கிய அறிவிலர் ஒருபால்
வறுமைதாங்கிய செல்வர்களொருபால்
கூட்டுப் பிரார்த்தனைக் கும்பலுமொருபால்
நாட்டை நலித்திடு நாவின ரொருபால்
பத்திச் செலாவணி பண்ணுவோ ரொருபால்
முத்திக் கொருநெறி மொழிபவரொருபால்

வேறு

காலே கையாகக் கனிபறித்து வாழ்ந்ததெலாம்
நாலேநால் நாட்பின்னர் ஞானம் பல வடைந் தோம்
நாதன் பெருவாக்கு வானத்து நல்வெளியிற்
கீதமுரைத்தது நாம் கேட்பதற்குச் செவியில்லை
" வாழ்த்துதற்கு வாய்தந்தேன் வஞ்சத்தையே யுரைத்தீர்
தாழ்த்துதற்குச் சென்னிதந்தேன் தலையெண்ணி யாட்சிசெய்வீர்
கூப்புதற்குக் கைதந்தேன் கூட்டிமனுக் குலத்தைத்
தீப்பிழம்புக் கிரையாக்கச் செய்வினைகள் செய்து வைத்தீர்
அன்பு செய்மி னென்று நெஞ்ச மச்சமின்றித் தந்துவைக்க
வன்புடெய்து விலங்குகொண்டு வாழ்கின்றீர் மானுடரே !
ஞானம் பெருகவென நல்லறிவை யேற்றிடவஞ்
ஞானம் பெருக்கி யெங்கும் நல்லொளியை மாய்த் திட்டீர்.
மூர்த்தி பெரிதாக முயன்று படைத்திட்டேன்
கீர்த்தி யழித்தெங்கும் கிறிசெய்து மாழ்கின்றீர்
இருளிற் பிறந்தளந்த ஏதமிலாப் பிரகிருதி
அருளில் மலர்வதற்கே ஆதி யொளி முகிழ்த்தேன்
கோயில் சமைத்தன்பைக் குலதெய்வமாக்கிவைத் தேன்
கோயி லுடைத்தன்பைக் கொலைசெய்து கூத் தெடுத்தீர் ".
" வாழ்வு சிறக்கவினி வழி யென்னென " விசைத் துத்

தாழவில் மனு மகனேர் தாழிசையிலோலமிட்டான்
†பெருங்காட்டிலே பிறந்த பேரொலியி னின்னிசையங்
கொருங்கெழுந்து வானத் துரைத்ததனைக் கேளாமோ
" அசதோமா சத்கமய தமசோமா சோதிர்கமய
மிருதயோமா மிருதம் கமய மெல்லிசையின் தமிழோசை
பொய்யொழித்துள்ளம் மெய்யில் நடாத்துக
அழிவொழித் தெமக்கழி யாநெறி யருளுக
இருளொழித் தெம்மை யொளியில் நடாத்துக "
எனவாங்கு,

† பிருஹதாரணிய உபநிடதம்.

வேறு

நள்ளிருளில் நட்டம் பயின்ருடும் நல்லொளியை
உள்ளி ஒளிபெறுவீ ரூங்கு.

### ஆசிரியர் குறிப்பு

**கவிஞர் சோ. நடராசா** அவர்களின் " **இருளில் ஒளி** " என்ற கவிதை சமீபத்தில் வெளியிடப்பட்ட போது ஒரு விமர்சகர் " அதில் புதைந்த பொருள் தானென்ன, விளங்கவில்லையே " என்று ஒரு பத்திரிகையில் எழுதினர். இதை நாம் கவிஞரிடம் சுட்டிக் காட்டி அக்கவிதையை " **ஸ்ரீலங்கா** " வில் ஒரு விளக்கக் குறிப்புடன் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அதன் பயனே இங்கு நாம் வெளியிடும் இக்கட்டுரையும் கவிதையும். கவிஞன் தான் கருதிய பொருளை அப்பட்டமாகக் கூறும் வெள்ளைக் கவியிலும் பார்க்க " பொருள் வெளிப் படையாகாமல் மறைந்திருப்பதே தேவர்க்குப் பிரியமானது " என்கிருர் இன்றைய ஈழத்தின் பெருங் **கவிஞர் சோ. நடராசா.** தினமும் வர்த்தக ஒலிபரப்பின் இலகு சங்கீதத்தைக் கேட்டுப் பழக்கப்பட்டவனுக்கு நல்லிசை கர்ணகடூரமாக இருப்பது இயல்புதான். வெள்ளைக் கவிதையில் வீழ்ந்தோர் கரையேறுவது கடினமேயாயினும் உண்மைக் கலையுணர்வு பெற கரையேறுவது நல்லது என்று இடித்துரைத்துக் காட்டுவதுபோலிருக்கிறது கவிஞர் எழுதியுள்ள விளக்கம். இதை எழுதித்தந்தமைக்கு அவருக்கு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

### கவிஞர் தரும் விளக்கம்

நாம் எழுதிய கவிதைகளில் பொருள்காண்பதற்குச் சிக்கலானது " இருளில் ஒளி ". எனது கவிதை ஆறு இங்கே புதிய தொரு திருப்பத்தையடைந் திருப்பதைக் காணலாம். உருவங்கள், மரபுபற்றி வந்த பழைய கருத்தோட்டங்களை, வீறுகொண்ட புதிய சொல்லோட்டங்கள், சம்பிரதாயத்தை உடைத் தெறிந்து பாயும் யாப்பமைதிகள், எதிர்பாராத எண்ண அலைகள் எல்லாஞ் சேர்ந்து உண்டானதே இப்புதிய திருப்பம். மரபுபற்றிய கருத்தோட்டங்களில் மனுஸ்மிருதி, பிருகதாரணிய உபநிடதம், திருவாசகம், டி. எஸ். எலியட், எல்லாம் இங்கே கலக்கின்றன :

இலக்கியப்போக்கை ஆராயும்போது சூழ்நிலை, கருத்தோட்டம், புலநெறிவழக்கு, வேற்றுப்புலச் சிந்தனைச் செல்வாக்கு, சமூக அனுபவம், காட்சிக்குவைக்கும்பொருள், அப்பொருளைத் தாங்கி நிற்கும் மெய்ப்பாடு, உரிப்பொருளென்னும் ரசம் இவற்றைத் தாங்கிச்செல்லும் சொல் என்ற இன்னேரன்ன விடயங்களைக் கருத்திற்கொள்ளவேண்டும். இவற்றின் துணை கைவந்தாலும், எழுத்தாளனது செம்புலத்தின் முழுப்பரப்பையும் அளந்துகொள்வது கஷ்டம். ஒருவனுடைய உணர்ச்சி முழுவதையும் இரசபாவத்துடன் சொல்லிமுடிப்பதற்கு மொழி எம்மாத்திரம். அதனுல்தான் இசையினுல் பாடுகிறேம். கல்லினும் மண்ணினும் சத்துவமூட்டுகிறேம். ஆற்றிலே நீரோட்டமதிகமானுல் அதன் போக்கு மாறவேசெய்யும். அனுபவம் கொஞ்சம் விரியத்துவங்கினுல் சேதனமும் விரிகிறது. ஒன்றை நினைக்க ஒன்பது உருவங்கள் வட்டமிடுகின்றன. மரபுபற்றிவந்த பழைய கருத்தோட்டங்கள் புதிய புதிய பொருளைக்கொண்டோடி வருகின்றன. பழைய சொற்களைப் புதியபொருள்களிற் கொண்டுவந்து நிறுத்தினுலோ என்று அங்கலாய்க்க வேண்டியிருக்கிறது. கேட்டும் பயின்றும் வந்த பல புலத்து எண்ணங்கள் அடிமனத்திலே சாந்தாகாரமாக அனந்தசயனஞ் செய்கின்றன. சிந்தனை முகிழ்த்ததும் வேட்டை நாய்களைப்போல் அவை திடீரென்று எழுந்து ஓடத்துவங்குகின்றன. சூல்கொண்டு கறுத்த மேகம்போல நமது சமயச் சம்பிரதாயங்களும் வந்து குவிகின்றன. இவற்றின்பின்னணியில் உலகை ஒரு நோக்கு நோக்க வேண்டியிருக்கிறது. சிருட்டிக் கூத்தை நடத்தும் தாண்டவ மூர்த்தி இருந்தாற் போல் கால்விரலை அசைத்து எழுகின்றுன். தமருக ஒலி ; பொருள். ஐயனின் ஆடல் ஊக்கத்தை உணர்ந்த அம்மை " ஐயனே ! மறுபடியும் ஆடல் விரும்பினையா ? இந்த ஊழிக்கூத்தை சதானந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டவத்தை ஆரம்பித்துவிட்டீர்களா ?" என்று கேட்கிருள். "ஓம்" என்ற பேரொலி இரைகிறது. மற்றெரு யுகம் பிறக்க ஆயத்தமாகிறது. இது காலப்பெருவெள்ளத்தில் ஒரு திவலே.

"ஆசீத் இதம் தமோபூதம்" "ஆதியில் இது இருள்மயம்" என்று மனுஸ்மிருதி கூறும். சிருட்டிக்கிரமம் ஆரம்பமாகிறது. புல்லும், பூடும், புழுவும் மரமும், கல்லாத மனிதரும் பேயும் எல்லாம் தோன்றுகின்றன. டார்வின் தத்துவத்தைக் கவி, மணிவாசகர் தந்த விஸ்வரூபதரிசனத்தில் கலக்கிருர். "கல்லாய் மனிதராய்" என்றுள்ள திருவாசக அடியைப் பாடபேதமாக்கிக் கல்லா மனிதர் எனக்கொண்டு தன் உணர்ச்சியை அங்கு ஊட்டுகிருர்.

மனிதன் ஆதியில் குரங்காகத்தானே தோற்றமளித்தான். அவனுடைய கைகள் அப்போது மற்கட அவதாரத்தில் (இங்கே உலகளந்த பெருமானின் அவதாரச் சிறப்பு சுட்டாமற் சுட்டிக்கொள்ளப்படுகிறது. ("பொருள் வெளிப்படையாகாமல் மறைந்திருப்பதே தேவர்க்குப் பிரியமானது" என்றுகூறும் பிரமாணங்கள்) மனிதப் பிறப்பில் கையாக மாற விருக்கும் காலேக்கொண்டு மரங்களில் கனிபறித்து வாழ்ந்தான் மனிதன். எத்தனே நாள் ? நாலு நாட்தான். பின்னர் முன் காலிரண்டும் கையாக மாறியதும் விலங்கின மனிதன் நிமிர்ந்து நின்ருன். உடனே ஞானம் உண்டானது. பல அறிவு, "ஞானம்" பிறந்ததும் மனிதன் மனிதனேப் பிடித்துத் தின்ன முற்பட்டான். சண்டையிட்டுத் தன்னினத்தையே கொன்ருன். மேலே வானத்தில் பருந்து வட்டமிட்டது. இது உருவகவாயிலாகக் காட்ட எண்ணியதொரு கருத்து.

இருள் மனிதனுக்குத் தெரிகிறது. இருளிலே அறிவென்னும் ஒளி பாயத்துவங்குகிறது. அறிவிஞல் இயற்கையின் இரகசியங்களேப் பலதுறையில் மனிதன் அறிகிருன். "விண்ணிலே விமானமூர்ந்து விசும்பெலாம் சுற்றி மீள் "கிருன். "வாக்குஞ் செயலும்" வகுக்கிருன். ஆஞல் மண்ணிலே இருந்து வாழவழி தெரியவில்லே. எப்பொழுதும் அலேந்து அலேந்து திரிகிருன். நிம்மதியாக இருந்து சுகம்பெறத் தெரியவில்லே ; பேச்சுக்கு எல்லேயில்லே. கடவுள் முதல் கட்டுத்தறியீருக எல்லாவற்றையும் பற்றிப் பேசுகிருன். பேசப்பழகினது குற்றமா ? யார் சொன்ஞர் ? ஆஞல் பேசாமல் இருந்து பேச்சால்வரும் நன்மையைப் பெறக்கூடாதா ? சொற்களே வீசுகிருர்கள். அதஞல் பொருள்களும் விரிகின்றன. சில சொற்கள் போதாவா ? பேருண்மைப் பொருள்களே மறந்து பொய்ப்பொருள்களேப் பெருக்கி அவற்றில் ஓயாமல் நீந்தவேண்டுமா ? இருளே அகற்ற அறிவு. ஒளிபெற்ற மனிதன் தாஞகவே இருளே உண்டாக்கி அதில்பல நூற்றுண்டாகக் கிடந்து உழல்கிருன்.

உலகில் எவ்வளவு ஏமாற்றம். வயிற்றை நிரப்பும் பசி ஒன்ரு ? மற்றவனே அடக்கியாளும் பசி ; தான் தலேமைபெற வேண்டுமென்ற பசி ; இவற்ருல் சிலர் சமயவேஷதாரிகளாகிருர்கள். சிலர். இனப்பற்று வேஷத்தை மேற்கொள்ளுகிருர்கள். சிலர் மொழிப் பற்றுச் சின்னத்தால் தம்மை மறைத்துக்கொள்கிருர். அறிவுபெறக் குறுக்குவழி தேடுவர். புகழ் பெறக் குறுக்குவழி தேடுவர். இவ்வாறு பத்திச் செலாவணி பலவழியிற் செய்து மற்றவர்களின் முத்திக்குவழி சொல்லுவார். தாம் பெத்தத்தில் ஆழ்ந்துகொண்டே.

பரம்பொருள் கீதம் பாடுகிறது. வெற்றிவீரனுயமைந்த மனுமகனே அந்தக் கீதாசிரியன் பார்த்துப் பாடுகிருன். கேட்டால்தானே ; "வாய்தந்தேன் வாழ்த்த ; எல்லாரையுந்தான் ; நீ வஞ்சனேயுரைத்தாய் ; சென்னிதந்தேன் தாழ்த்த ; நீ தலேகளே எண்ணிச் சனநாயகமென்று சொல்லி மனுமகனே அடிமைப்படுத்திவிட்டாய். கையைத் தந்தேன். கூப்புதற்கு, மனுக்குலத்தைக் கையால் வாழ்விக்க ; நீ அணுக்குண்டைச்செய்து அழிக்க வழிதேடினய். அறிவால் அறிவை மாய்த்தாய் ; என்னேப் போல உன்னேப் படைத்தேன் ; நீ கிறிசெய்து ; பொய்யில் நடந்து ஏமாறுகிருய். இருளில் பிறந்தது இந்தப் பிரபஞ்சம். இருள் ஒளியின் நீண்டசாயல். அருள் மலர அன்பை ஊற்றினேன். நீ அன்பைக் குழப்பி அச்சமடைந்து சஞ்சலத்தில் வாழ்கிருய். பக்திசெய் ; உலகத்தை உன்னில் காண் ; உன்னே உலகத்தில் காண்" என்று பரம்பொருள் கீதமாகப் பாடிற்று. கேட்கச் செவியிருந்தால்தானே : அப்பொழுது பிருகதாரணிய மென்ற காட்டிலிருந்து சத்தம் கேட்கிறது. பிரகதாரணியம் என்ருல் பெருங்காடு ; நகரத்தில் இவ்வாறு மனிதன் அல்லற்பட காடுபார்த்து இரங்கி ஓலமிடுகிறது. அதன் ஓலம் பழைய சனுதனமான ஓலம். அந்த உப நிடதவாக்கியம் "அசத்திலிருந்து சத்துக்கு என்னே அழைத்துச் செல் ; சாவிலிருந்து என்னேச் சாவாநெறிக்கு இட்டுச் செல் ; இருளே ஒழித்து ஒளிக்கு என்னே நடத்து" என்று கூவுகிறது.

இந்தப் பரம்பொருள் ; இதை உண்டாக்கிய தத்துவமூர்த்தி இங்கே ஒளியை மனுமகன் பெறவேண்டுமென்று விரும்பிஞன். விருப்பு வெறுப்பில்லா தானுக்கு விருப்பென்ன ? அது ஒரு நியதி. கூர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No..........



நியதி; பரம்பொருளின் விதி. விதி என்றால் அமைப்பு. தருமம்; தன்மை—செம்பஞ்சுக் குழம்பு பூசிய மிருதுவான பாதத்தால் அசோகமரத்துக்கு ஒருசிறு உதைகொடுத்தால் அது பூத்துக்குலுங்கும் என்பது வடமொழிக்கவிசமயம்—கவிமரபு. நாட்டிய நாயகனது பாதச்சிறுவிரல் அசைந்ததும் இந்தப் பெருநிதியை உணர்த்தவே. சொற்கள் ஓரளவுக்குத் தான் மனிதனுக்குப் பயன்படும். உணர்ச்சி உள்ளத் துக்கருத்து எல்லாவற்றையும் சொற்களால் பூரண மாகச் சொல்ல முடியுமா? எனவே உய்த்துணர வேண்டியவை இப்பாடலில் பல. முதலில் ஒத்த உள்ளம்படைத்தவராக மாறுவதற்கு இக்குறிப்புக் கள் ஓரளவு துணைபுரிவதாக—எதையும் நயப்பதற்கு சகிதருதம் என்ற உள்ளத்து ஒருமைப்பாடுவேண்டும்.

கவிகளை நயப்பதற்கு முதலில் இந்தப்பின்னணி யில் ஒருமைப்பாட்டை உண்டாக்கிக்கொண்டால் பொருள் அறிவதிற்கஷ்டமிராது. சொற்களுக்குப் பொருளறிவதிலும் அவைதாங்கி நிற்கும் உணர்ச்சி வேகத்தை உணர்ந்துகொள்வதே முக்கியம்.

## வட இலங்கையில் மூன்று . . . .

(22 ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் கிளிநொச்சிக்குச் சென்ற மந்திரி அவர் கள் இளைஞர் விவசாய, நிலையத்துக்கு விஜயஞ் செய்தார். கோழி வளர்ப்புப் பண்ணையைத் தரிசித்ததையடுத்து கனகபுரம் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழி வாற்றியபின் **திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா** அவர்கள் அனுராதபுரம் திரும் பினார்கள்.

இத்துடன் மூன்று மந்திரிகளின் வடமாகாணச் சுற்றுப் பிரயாணம் முடிவெய்திற்று.

---

(ஒரே நேரத்தில் மூன்றுமந்திரிகளும் வெவ்வேறு வைபவங் களில் தனித்தனியே கலந்து கொண்டதால் சில நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள் இங்கு தொகுத்துக்கூறப்பட்டுள்ளன. எனினும் முக்கியமான நிகழ்ச்சிகளும், மந்திரிகளின் பேச்சுக்களும் இக்கட்டுரையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ப—ர்).

# தமிழ் முனிவர் கணேசையர்

(அ. ந. க.)

1. செந்தமிழ் மாமுனிவன் சின்னையர் பெற்றெடுத்த
நந்தமிழ் ஆசான் கணேசையன் — முந்தும்
தவவளத்தால் ஈழத் தமிழ்வளர்க்க வந்தான்
அவன்நினைவு பேணிடுவோம் யாம்.

2. புன்னாலைக் கட்டுவனின் நற்புலவர் தங்கோமான்
பொன்னையா வள்ளல் துணைக்கொண்டு — தன்னேரில்
தொல்காப் பியத்தைத் துலக்கி வெளியிட்டு
ஒல்காப் புகழெய்தி னான்.

3. ஈழப் புலவர் இனிய வரலாறு
காலக் கடலில்க் கரையாது — நூலாய்த்
தொகுத்துரைத்தான் செந்தமிழ்ச் சேவையஃ தொன்றே
அகத்தே நிலைகொண் டவன்

4. மற்றெல்லாப் பற்றுமிவண் அற்றாலும் வண்டமிழின்
பற்றொன்றே பற்றாகப் பற்றிட்டோன் — குற்றமில்
செந்தமிழைச் சேர்ந்தார்க்கு வாரி வழங்கிவந்த
அந்தணர்தம் கோவென் றறை.

5. நினைவெல்லாம் செந்தமிழின் நன்நினைவே காணும்
கனவெல்லாம் செந்தமிழ்க் கானம் — அனைத்தும்
தமிழாக் கெனவளித்த தண்டமிழா ளன்பேர்
தமிழுள்ள காலுலகில் வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(26 ம் பக்கத் தொடர்ச்சி)

**ஐயா அவர்கள் பாடஞ்சொல்லி உபாத்தியாயர் ஆகி இருந்தார்கள்.**

அந்தப் பாக்கியம் இல்லாத உபாத்தியாயர்களுக்கு இந்தக் குறிப்பு உபாத்தியாயராய் உதவுகின்றது. **அதனுல், ஐயா அவர்கள் அன்று உபாத்தியாயர்; இன்று மகாமகோபாத்தியாயர்.**

**அவர்கள் மகாமகோபாத்தியாயராய் விளங்குவதற்கு தொல்காப்பிய விளக்கத்தைப் பதித்து உதவி புரிந்தமையால், திரு. நா. பொன்னையா தமிழ்ப் புலவராய் விளங்குகின்ருர்.**

**மேற்படி பட்டங்களை வழங்கும் உரிமை இருந்தால் மறைந்த அவர்களுக்கு வழங்கி மகிழ்வோமாக.**


## ஸ்ரீ லங்கா சஞ்சிகைக்கு

**சந்தாதாரர்களாகச் சேர்ந்துவிட்டீர்களா ?**

இன்னும் சேராவிட்டால் பின்வரும் பத்திரத்தைக் கத்தரித்து அல்லது இதைப்போல் எழுதி அனுப்பவும்.

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,
தபாற் பெட்டி இல. 500,
கொழும்பு.

ஐயா !

நான் ஸ்ரீலங்கா பத்திரிகையின் 13 ம் மலருக்கு சந்தாதாரராகச் சேரவிரும்புகிறேன்.

எனது பெயர் : ..............................................

விலாசம் : ..............................................................

..............................................................

அனுப்பும் போஸ்றல் ஓடர்/மனி ஓடர் இல...........................

(இது அரசாங்க பிரசுர நிலைய அதிபரின் பேருக்கு எடுக்கப்பட வேண்டும்).

**தபாற் செலவு உட்பட வருடச் சந்தா ரூபா 3.00**

திகதி : .......................... ஒப்பம் : ..........................


## எழுதுங்கள்

திருத்தலங்கள், எங்கள் ஊர், கலை, கைப்பணி, சரித்திரம், இலக்கியம், நாடகங்கள் என்பன சம்பந்தமான கட்டுரைகளை படங்களுடன் வாசகர்களிடமிருந்து பெற்றுப் பிரசுரிக்கத் தீர்மானித்திருக்கிருேம். அரசியல் கலப்பற்ற கட்டுரைகளே வரவேற்கப்படும். தகுந்தனவாகக் கருதப்படும் கட்டுரைகளே சஞ்சிகையில் இடம்பெறும். அரசாங்க விஷயங்களைப் பிரசுரித்து எஞ்சும் இடத்திலேயே இக்கட்டுரைகளுக்கு இடமளிக்கப்படுமாகையால், உடனடியாகப் பிரசுரத்துக்கு உத்தரவாதமளிக்க முடியாதென்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P... RO ROAD
NALLUR, JAFFNA
No..................

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

## தமிழில் சட்ட சம்பந்தமான நூல்கள்

| | | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | அத்தியாயம் 60 கார்ச் சாரதிகள் சம்பந்தமான ஒழுங்குகள் ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம் .. .. | 0 10 | 0 10 |
| 2. | அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் சட்டம் .. .. | 1 30 | 0 35 |
| 3. | அதிகாரம் 95—கலியாணப் (பொதுச்) சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 4. | (i) 1940 ம் ஆண்டின் 15 ம் இலக்க 'கலியாணப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 50 | 0 10 |
| | (ii) 1944 ம் ஆண்டின் 49 ம் இலக்க ஷை .. | 0 50 | 0 10 |
| | (iii) 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க ஷை .. .. | 0 50 | 0 10 |
| | (iv) 1946 ம் ஆண்டின் 34 ம் இலக்க ஷை .. .. | 0 50 | 0 10 |
| 5. | அத்தியாயம் 104—தத்துவப் பத்திரங்கள் சட்டம் .. .. | 0 20 | 0 10 |
| 6. | அத்தியாயம் 115—வீட்டுப் பணியாளர் பதிவுக் கட்டளைச் சட்டம் .. | 0 30 | 0 10 |
| 7. | அத்தியாயம் 116—தொழிற் சங்க கட்டளைச் சட்டம் .. .. | 0 80 | 0 20 |
| 8. | அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் .. | 0 40 | 0 10 |
| 9. | அத்தியாயம் 198—கிராமச் சமுதாயச் சட்டத்தின் மறுபதிப்பு .. | 1 30 | 0 35 |
| 10. | 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்க கிராமச் சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 11. | 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்துதலுக்காகவும் பராதீனப் படுத்துதலுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. .. | 1 05 | 0 35 |
| 12. | 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்க கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. .. | 0 45 | 0 20 |
| 13. | 1939 ம் ஆண்டின் 32 ம் இலக்க பிரசவ உதவிப் பணக் கட்டளைச் சட்டம் | 0 30 | 0 20 |
| 14. | 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைகள் சட்டம் .. | 1 10 | 0 35 |
| 15. | 1942 ம் ஆண்டின் 45 ம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் .. | 2 75 | 0 35 |
| 16. | 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்க ஒரு ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடுகள் செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 10 |

**குறிப்பு.**—அரசாங்க பிரசுர நிலைய அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org